விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 22 சனிக்கிழமை (07.11.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 324

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

## கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில்
# மாவட்ட செயலகத்தில் கிராமிய பொருளாதார மேம்பாட்டு கூட்டம்

## அபிவிருத்தி தொடர்பில் முக்கிய தீர்மானங்கள் முன்னெடுப்பு

- மானிப்பாய் - காரைநகர் மற்றும் புத்தூர் - கந்தரோடை வீதிகளை புனரமைத்தல்.
- நெடுந்தீவு பிரதான வீதியை புனரமைத்தல்.
- நெடுந்தீவுக்கான கடல் வழி பயண ஏற்பாடுகளுக்கு முன்னுரிமை.
- யாழ்.குடாநாட்டுக்கான குடிநீர் விவகாரம் தொடர்பில் ஆராய்வு.

(19ஆம் பக்கம் பார்க்க)



# கொரோனா வைரஸின் மூன்றாம் அலை ஜனவரி மாதம் நாட்டில் உருவாகலாம்

### சுகாதார அமைச்சின் செயலாளர் ஜயருவான்

(கொழும்பு)
கொரோனா வைரஸின் மூன்றாம் அலை ஜனவரி மாதம் நாட்டில் உருவாகலாம் என சுகாதார அமைச்சின் செயலாளர் ஜயருவான் பண்டார தெரிவித்துள்ளார்.
மக்கள் கோவிட் - 19 உடன் வாழ பழகிக் கொள்ள வேண்டும் என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இரண்டாவது அலையின் போது 19

## நாட்டில் நேற்றும் +400 தொற்றாளர்கள்

(கொழும்பு)
நாட்டில் நேற்றும் 400 பேருககு கொரோனா வைரஸ் தொற்று 19

### யாழ்.மாவட்ட செயலகத்தில்
## கூட்டம் நடத்த முடியாது என எழுத்தில் வழங்கினேன்
### மாவட்ட பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி

(யாழ்ப்பாணம்).
யாழ்.மாவட்ட செயலகத்தில் கூட்டம் நடத்த முடியாது என பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி எழுத்தில் வழங்கியபோதும் அதனை 19

## சோளன் வியாபாரி வவுனியாவில் சடலமாக மீட்பு

(வவுனியா)
அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த சோளன் வியாபாரி ஒருவர், வவுனியா கனகராயன் குளம் பகுதியில் வாகனத்தில் சடல 19

## யாழ்.நகரில் அடுத்தடுத்து 3 கடைகள் உடைத்து திருட்டு
### பல இலட்சம் பெறுமதியான பணம், நகை கொள்ளை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் நகரின் கஸ்தூரியார் வீதியில் உள்ள மூன்று கடைகள் நேற்று அதிகாலை வேளையில் உடைத்து பல இலட்சம் ரூபாய் 19

## வர்த்தக நிலையத்துக்குள் புகுந்து தாக்குதல்
### மானிப்பாயில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
மானிப்பாயில் பலசரக்கு கடை ஒன்றுக்குள் புகுந்த வன்முறைக் கும்பல் ஒன்று உரிமையாளர் மீது தாக்குதல் நடத்தியதுடன், கடையிலுள்ள 19

## தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை அரசியலாக்காதீர்
### பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)
தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை அரசியலாக்க வேண்டாம் என்று பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.
அரசியல் கைதிகளின் விடுதலை விவ 19

## க.பொ.த (சா/த) பரீட்சைக்கான திகதி அறிவிப்பு

(கொழும்பு)
2020ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகளை எதிர்வரும் 2021ஆம் ஆண்டு ஜனவரி 19

## தென்மராட்சி, கிளிநொச்சியில் வாள்வெட்டுத் தாக்குதல்
### மூன்று பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
தென்மராட்சி மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் நேற்று இடம்பெற்ற வெவ்வேறு வாள்வெட்டுத் தாக்குதலில் மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர்.
தென்மராட்சியில் ரௌடிகள் வீடு புகுந்து 19

## 23 வயது இளைஞன் கொரோனாவுக்கு பலி
### உயிரிழப்பு 30 ஆக உயர்வு

(கொழும்பு)
நாட்டில் கோவிட்-19 நோயால் 23 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. 19

# மரண அறிவித்தல்

பிறப்பு 12 – 03 – 1944



இறப்பு 31 – 10 – 2020

## திருமதி
## விக்டோரியா செல்வராணி துரைசிங்கம்

யாழ்ப்பாணம், சங்கானையைப் பிறப்பிடமாகவும் சங்கானை, நீர்கொழும்பு தற்பொழுது தென்னாபிரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விக்டோரியா செல்வராணி துரைசிங்கம் 31.10.2020 சனிக்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பெரியார் ஞானப்பிரகாசம் - ஞானப்பிரகாசம் அன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற பிரான்சிஸ் அல்பிரட் துரைசிங்கத்தின் (J.P - Whole Island) மனைவியும் Prof. T.M வேந்தனின் அன்புத் தாயும் M.V. கலைவாணியின் அன்பு மாமியாரும் M.V. சர்வியின் அன்புப் பேத்தியும் காலஞ்சென்ற பிரான்சிஸ் சலேசியார், காலஞ்சென்ற தம்பிதுரை நேசம்மா மற்றும் ஞானப்பிரகாசம் எட்வேட், எட்வேட் மேரிராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரது பூதவுடல் தென்னாபிரிக்காவில் Bloemfontein என்ற இடத்தில் 09.11.2020 திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் தகனம் செய்யப்பட்டு பின்னர் அஸ்தி (சாம்பல்) இலங்கை கொண்டு வரப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

0026658691693 (4538) தகவல்:- மகன், மருமகள்.

# ஓராண்டு நினைவினில்...



## சிவானந்தமூர்த்தி புகலவன்



ஊரெல்லாம் அமைதியாய் உள்ளபோது!
உறக்கம் கலைந்து கிடந்தோம் உந்தன் நினைவோடு!
பிஞ்சே உன்னை மீட்போம் என்ற துணிவோடு!
சென்றலைந்தோம் பாரதம்
எம் நெஞ்சுக்கனத்தோடு!
பெரும் விருட்சமாகி நிழல் கொடுப்பாய்
என்று நாம் இருந்தபோது
புகலவா பிஞ்சினிலே உதிர்ந்துவிட்டாய்
எம் தோப்பைவிட்டு
தேடுகின்றோம் உன் புன்னகையை
எம் வீட்டினிலே...

சுவிஸ் (C-646) ஆசை மாமா குடும்பத்தினர்

# ஓராண்டு நினைவு



## சிவானந்தமூர்த்தி
## புகலவன்

ஊர்கூடி மகிழ்ந்திட்ட ஒரு கூடு !
கல்வெட்டித்திடல் கந்தன்
நேசித்த ஒரு வீடு!
மார்தட்டி வாழ்ந்திட்ட ஒரு மைந்தன்
வழிவந்த கடைக்குட்டி நீ எங்கே

எம் தம்பி புகலவா எங்கே நீ
சென்றாயோ! பேரிடர்கள் வந்தபோதும் எம்மை மகிழ்வித்தாய்!
செல்லக்கதைபேசி எமக்கென்று உயிரானாய்!
பால்கொடுத்த நினைவுகளே ஆற முன்பு
பாலகனே எம்மைவிட்டு எங்கு சென்றாய்!

அழுதழுதே தேய்கின்றாள் உன் அன்னையவள்!
பரிதவிக்கவிட்டு நீ எங்குசென்றாய் !
கதறுகிறார் உன்தந்தை உனைநினைந்து !
கண்ணீரம் காயமுன்பே வந்ததுவோ ஓர் ஆண்டு

உன் ஆத்மா சாந்தி அடைந்திடுமோ!
உன் தனயர் துயருணர்ந்து கூட இருந்திடுமோ!
எம் பூச்சரமே எம்மோடு நீ வாழ்ந்துவிடு நிஜமாக!
எம் நினைவோடு சேர்ந்துவிடு!



(C-646)

உதயநகர் கிழக்கு,
கிளிநொச்சி.

குடும்பத்தினர்

# போலி தகவல்களை வழங்கினால் 5 வருட சிறை-பொலிஸ் தலைமையகம்

(கொழும்பு)

**தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளின் போது போலி தகவல்களை வழங்கும் நபர்களை ஐந்து வருடங்கள் வரை சிறை வைக்க முடியும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டு வரும் தனிமைப்படுத்தல், நடவடிக்கைகளின் போது எவரேனும் ஒருவர் அவருடைய பெயர் அல்லது விலாசம் தொடர்பில் பிழையான விபரங்களை வழங்கினால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.


இதேவேளை, தன்னை பிறிதொரு நபரைப் போன்று அடையாளப்படுத்தினாலும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

இது தனிமைப்படுத்தல் சட்ட விதிகளுக்கமைய குற்றச் செயலாக இருப்பதுடன், பிறிதொரு நபராக தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளும் போது அங்கே மோசடிகளும் இடம்பெற்றுள்ளது என்ற நிலைபாட்டிற்கு வர முடியும்.

இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது சந்தேக நபர்களினால் வழங்கப்படும் தகவல்கள் அனைத்தும் ஆவணப்படுத்தப்படுவதால் அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்து, அவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்தை நிரூபிக்கவும் உரிய ஆதாரங்கள் எம்மிடம் இருக்கும்.

அதற்கமைய மேற்படி குற்றச்சாட்டுகள் தொடர்பில் குற்றம் நிரூபிக்கப்பட்ட நபரொருவரை ஐந்து வருடங்கள் வரை சிறை வைக்கவும் முடியும் என அவர் தெரிவித்தார். (நி)

# உலகளவில் உருவாகும் மூன்றாவது அலையை எதிர்கொள்ள தயாராக வேண்டும்- ரணில்



(கொழும்பு)

நாட்டில் தற்போது பரவி வரும் கொரோனா வைரஸ் அலையானது அடுத்த ஒரு மாதம் அல்லது ஒன்றரை மாதத்திற்குள் முடிவுக்கு வரும் எனவும் அதன் பின்னர் எந்த நேரத்திலாவது வரும் மூன்றாவது அலையானது மிக பயங்கரமானதாக இருக்கும் எனவும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வுகூறியுள்ளார்.

இலங்கையின் கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அலையானது மீன்பிடித் தொழில் போன்ற இடங்களில் ஆரம்பமாகும் எனவும் இதனால், பி.சி.ஆர். இயந்திரங்களை கூடிய விரைவில் இறக்குமதி செய்து இதற்கு தயாராக இருக்க வேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க கடந்த மார்ச் மாதம் கூறியிருந்தார்.

அத்துடன் கொரோனா வைரஸ் பரவலின் மூன்றாவது அலையானது உலகளவில் உருவாகும் என கூறியுள்ள அவர், அது எப்போது இலங்கைக்குள் பரவும் என்பதை கூற முடியாது என்றாலும் அது மிகப் பயங்கரமானதாக இருக்கும் என்பதால், முன்கூட்டியே அதற்குத் தயாராக இருக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

தான் தற்போது அரசியலில் இருந்து ஒதுங்கி அமைதியாக இருந்தாலும் இவை தொடர்பான அனைத்தையும் ஆராய்ந்து வருவதாகவும் இந்த தருணத்தில் எதிர்காலம் தொடர்பான தெளிவான திட்டங்களுடன் ஆட்சியாளர்கள் செயற்பட வேண்டும் எனவும் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (நி)

# கொவிட்-19 தொடர்பான போலித்தகவல்கள்; மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

(கொழும்பு)

கொவிட் - 19 நோய்த் தொற்று தொடர்பிலான போலித் தகவல்கள் பகிரப்படுவது குறித்து உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இணையத்தில் இவ்வாறான தகவல்கள் பகிரப்பட்டு வருவது குறித்து உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக் கிளை இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இணையத்தில் கிடைக்கப்பெறும் தகவல்கள் உண்மையானவையா? என்பதனை சரிபார்த்ததன் பின்னர் அவற்றை ஏனையவர்களுடன் பகிர்ந்து கொள்ளுமாறு கோரியுள்ளது.

கொவிட் - 19 நோய்த் தொற்று நிலைமை குறித்து அதிகாரபூர்வமான தகவல்களை வெளியிடும் இணையத்தளங்களின் ஊடாக சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏதேனும் போலியான தகவல்கள் பகிரப்படுவதனை அவதானித்தால் அது குறித்து 1999 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில போலித்தகவல்கள் ஆபத்துக்களை விளைவிக்கக் கூடியவை என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

சமூக ஊடகங்களிலும் இவ்வாறு போலித் தகவல்கள் பகிரப்பட்டு வருவதாகவும் இது குறித்தும் அந்தந்த சமூக ஊடகங்களிற்கு அறிவிக்கப்பட வேண்டியது அவசியமானது எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (நி)

# அபராதத் தொகை செலுத்த கால அவகாசம்

(கொழும்பு)

ஊரடங்கு சட்டம் அமுலிலுள்ள பகுதிகளிலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளிலும் போக்குவரத்து வாகனங்களுக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகையை செலுத்துவதற்கு மேலதிக கால அவகாசத்தை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கிணங்க கொரோனா பரவல் காரணமாக அலுவலகப் பணிகள் இடைநிறுத்தப்பட்ட நாள் முதல் நாடளாவிய ரீதியில் பயணக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும் நாளின் பின்னர் அபராதத்தை செலுத்த முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அறிவுறுத்தல்களுக்கமைய மூடப்பட்டுள்ள பகுதிகள் மற்றும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலிலுள்ள பகுதிகளில் தபாலகங்களும் மூடப்பட்டுள்ளதால், இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-4)

# விசேட அதிரடிப்படையினரால் மரக்கடத்தல் முறியடிப்பு



(நெளுக்குளம்)

வவுனியா கருங்காலிகுளம் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கடத்திச்செல்லப்பட்ட முதிரை மரக்குற்றிகள் மடுக்கந்தை விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டன.

இதுகுறித்து தெரியவருவதாவது,

கருங்காலிகுளம் பகுதியில் முதிரைமரக்குற்றிகள் கடத்தப்படவுள்ளதாக மடுக்கந்தை விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் நள்ளிரவு அப்பகுதிக்கு சென்ற விசேட அதிரடிப் படையினர் மற்றும் வவுனியா வனவள அதிகாரிகளால் இக்கடத்தல் சம்பவம் முறியடிக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் பல லட்சம் ரூபாய் பெறுமதியான 8 முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், கடத்தலுக்கு பயன்படுத்திய வாகனத்தையும் கைப்பற்றினர். இக்கடத்தல் சம்பவத்தில் தொடர்புடைய ஒருவரையும் கைது செய்துள்ளனர். (5-4-299)

# வீடுகளிலிருந்தே தீபாவளியை கொண்டாடுங்கள்



(கொழும்பு)

தற்போது நாட்டில் வேகமாக பரவிவரும் கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள இந்து சமய மக்கள் அனைவரும் இவ் வருட தீபாவளியை வீட்டிலிருந்தே கொண்டாடுமாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில், இந்துக்களது பாரம்பரியப் பண்டிகைகளில் ஒன்றான தீபாவளிப் பண்டிகையானது இம்மாதம் 14 ஆம் திகதி உலக வாழ் இந்துக்களால் கொண்டாடப்படவுள்ளது.

தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள கொரோனா திரைப்பரவல் காலப்பகுதியில் வரும் இந்தப் பண்டிகை நாளில் நாம் கூட்டுப்பொறுப்புடன் நடந்து கொள்வது எமது அனைவரது நல்வாழ்விற்கும் அவசியமாகும்.

எனவே, எமது வீடுகளில் உள்ள மூத்தோர், கர்ப்பவதிகள் மற்றும் நாட்பட்ட நோய்களுடன் வாழும் உறவுகள் ஆகியோரைக் கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்காகவும் எம்மை நாமே பாதுகாத்துக் கொள்வதற்காகவும் இந்தப் பண்டிகை தினத்தினை அவரவர் வீடுகளில் இருந்து மிகவும் அமைதியாகக் கொண்டாடுமாறு எமது மக்களிடம் நாம் உரிமையோடு வேண்டிக்கொள்கிறோம்.

அயலவர்கள் மற்றும் உறவினர் வீடுகளுக்குச் செல்வதையும் புத்தாடைகள் மற்றும் அணிகலன்கள் வாங்கச் செல்வதையும் ஆலயங்களுக்குச் செல்வதையும் இவ்வருடம் தவிர்த்து வீட்டிலிருந்தவாறே பிரார்த்தனைகளில் ஈடுபடுவதன் மூலம் எம்மை எதிர்நோக்கியுள்ள சுகாதாரச் சவாலினை முறியடிப்போமாக என சம்பந்தன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—219

## கொரோனா பரவலின்போது வினைத்திறனான சந்தைப்படுத்தலுக்கான வாய்ப்பு!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

கொரோனாவின் அலை மீண்டும் எம்மவர்கள் மத்தியில் அதிகரிக்கின்ற நிலை தோன்றுவதாக தெரிகின்றது. அதனால் தொற்றுதலுக்குள்ளானவர்களை தனிமைப்படுத்த வேண்டிய நிலையும் தோன்றியிருக்கின்றது. இதனைத் தவிர்த்துப் பார்த்தால் கொரோனா வைரஸ் (Corona virus) மீண்டும் மீண்டும் வேகங்கொண்டு பரவ ஆரம்பிக்கின்றது என ஊகிக்க முடிகின்றது. வடமாகாணத்திலும் ஆங்காங்கே தொற்றுதலுக்குள்ளானவர்களை இனங்கண்டு தனிமைப்படுத்தி பராமரிக்க வேண்டியிருக்கின்றது.

இதன்மூலம் இத்தொற்றுதல் மற்றையவர்களுக்கு சென்றடையாது மிகுந்த அவதானமாக கவனிக்கப்படுகின்றது. இவையனைத்தும் இந்நோய் ஏனையவர்களுக்கு தொற்றாமல் வருமுன் காத்தல் செயன்முறைக்கமைவானதாகும். வயது வேறுபாடின்றி அனைவரையும் பதம்பாக்கும் தொற்றுநோயாக பரிணமித்திருக்கின்றது.

எங்கிருந்து வருகின்றது? எப்படி வருகின்றது? என எவராலும் இலகுவில் கண்டு பிடிக்கமுடியாதளவிற்கு தொற்றுநோயாளர்கள்தங்களை வெளிக்கொணர விரும்பவில்லை. தொற்றுதல் வந்த பின்னரும் அசட்டையாக இருந்தால் அது உயிருக்கே பாதகமாகிவிடும் என்பதனை கவனத்தில் கொள்க.

தற்போதைய காலகட்டத்தில் தற்செயலாக எமக்கு தொற்றுதல் ஏற்பட்டால் அதனை அந்தந்த பகுதி சுகாதார பரிசோதகருக்கோ அல்லது கிராம உத்தியோகத்தருக்கோ தெரியப்படுத்தல் அவசியமாகும். யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என மற்றையவர்களுக்கு தொற்றுதலை ஏற்படுத்தி விடாதீர்கள்.

வயது வந்த நோயினால் தள்ளாடும் முதியவர்களில் இந்நோய் தொற்றினால் அவர்களின் உயிரை விரைந்து பதம்பார்த்துவிடும் என்பதனையும் நாம் கவனத்தில் கொண்டால் மிகவும் நல்லது.

இவ்வாறான கொரோனா தொற்று பரவும் காலங்களில் உணவினை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதென்பது ஒரு பிரச்சினையாகவே எழும். ஏனெனில் தொற்றுக் கண்டவர்களின் குடும்பங்கள் வாழும் கிராமப்பகுதி மக்கள் நடமாடாதவாறு கட்டுப்படுத்தப்படும் போது அவர்களுக்கான அன்றாட உணவைப் பெற்றுக்கொள்வதற்கு சிறப்பு ஏற்பாடுகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

இருந்தாலும் அந்த குடும்பங்கள் தமக்கு தேவையான உணவைப் பெற்றுக் கொள்ளும் போது தொற்றுதல் இரண்டு பக்கங்களிலிருந்தும் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. ஆனாலும் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்கள்சத்தான உணவை உட்கொண்டு சுகதேகிகளாக இன்னும் தேகாரோக்கியமுள்ளவர்களாக பார்த்துக்கொள்ள வேண்டும்.

கொரோனா என்பது உடனடியாக முடியப்போகும் விடயமல்ல என்பதும் அது தொடர்ந்து இன்னும் பல ஆண்டுகள் எம்மோடு இருக்கப்போகின்றது என்பதனையும் நாம் புரிந்து கொண்டால் நாம் அதனுடன் சேர்ந்து (Co-exists) வாழப்பழக்கிக்கொள்ள வேண்டும் என்பதுதான் தற்போதைய நிலைமை.

எமது உடல் எதிர்ப்பு சக்தியை இழக்க நேரிடும் போது அது எமக்குள்ளே பிரச்சினைகளை உருவாக்கிவிடும் என்பதனால் நாம் மிகவும் அவதானமாக தற்போது கடைப்பிடிக்கும் அதே சுகாதார நடைமுறைகளை தவறாது கடைப்பிடித்துக் கொள்ளவேண்டும். இது காலத்தின் கட்டாயமும் கூட.

உணவுற்பத்தி என்பது இடர்காலமெனினும் விவசாயப்பெருமக்களின் விடாத முயற்சியினாலும் அவர்களது தன்னம்பிக்கையினாலும் உற்பத்தி செய்யப்படுவனவற்றை மக்களுக்கு விற்பதற்கான வழிவகைகள் செய்து கொடுக்கப்படல் வேண்டும். கடந்த கொரோனா காலத்தில் மொபைல் தொழில்நுட்பத்தின் வசதிகளைப் பயன்படுத்தி உற்பத்தியான கணிசமான பொருட்கள் மக்களுக்கு விற்கப்பட்டதனை நாமறிவோம்.

ஆனால் அவ்வாறான பொறிமுறைக்குள் எம்மை தயார்படுத்திக் கொள்வதற்கு நீண்டகால அவகாசம் தேவைப்பட்டது. ஆனால் அதற்குப்பின்னர் எம்மிடமுள்ள தொழில்நுட்ப வசதிகளைக் கொண்டு எம்மால் பயன்படுத்தக்கூடியதாக தற்போதுள்ள பொறிமுறையை மாற்றியமைத்துள்ளோம்.

தற்போது பலர் தமது கைப்பேசி எண்ணை கொடுத்து விட்டு அதன் மூலமாக விற்பனையை செய்வதனை அவதானிக்கலாம். மொபைல் தொழில்நுட்பம் தற்போது பாமர மக்களையும் அதனை பயன்படுத்த தூண்டிவிட்டுள்ளது.

இவ்வாறான மாற்றியமைக்கப்பட்ட பொறிமுறைக்கூடாக அனைத்து விவசாயப் பெருமக்களையும் உற்பத்திகளை வாங்கும் பொதுமக்களையும் இணைக்க முடிந்துள்ளது. தற்போது இவற்றுக்கெல்லாம் இலகு செய்தியாக இந்த வகை தொடர்பாடல் இன்னும் விரிவுபடுத்தப்பட்டு வருகின்றது. .

மக்களிடையே பொருட்களை வீடுகளுக்கு எடுத்துப் பாதுகாப்பாக எடுத்துச் செல்வதற்கான வழிவகைகளை விற்பனையாளர்கள் கையாளமுற்படுவதும் காண முடிகின்றது.

உற்பத்தியாகும்உணவினை பாதுகாப்பாக பொதி செய்வது அவசியமானதாகும். வழங்கும் இப்பொருட்களினூடாக வைரஸ் தொற்று ஏற்பட்டுவிடக்கூடாது என்பதனை நாம் அவசியம் கவனத்திற் கொள்ளல் வேண்டும். பொதி செய்தலில் தரமான பொருட்களைப் பயன்படுத்தல் வேண்டும்.

ஒருபக்கம் பொலித்தீன் பாவனையை கட்டுப்படுத்த முயற்சிக்கும் நாம் அதனை தற்போது வேறு வழியின்றி கண்டும் காணாமல் விட வேண்டியிருக்கின்றது. பொலித்தீனின் அவசியமற்ற பாவனையைக் கட்டுப்படுத்தும் அதேவேளையில் தேவைகருதி தொற்று ஏற்படாமலிருக்க அதனை அவசியம் பயன்படுத்த வேண்டியும் இருக்கின்றது. பொலித்தீன் கவர்களினால் கையுறைகளை தயாரித்து அதனை பயன்படுத்தியபின் எரித்து விடுதல் அவசியம். மாறாக பலர் பாவித்த கையுறைகளும் முகமூடிகளும் தெருவோரம் எறியப்பட்டு விடப்பட்டிருப்பதனை காணலாம்.

நிச்சயமாக நாம் அவற்றின் பயன்பாடு முடிந்தபின் எரித்துவிடல் வேண்டும். இந்த விடயத்தில் சமூகத்தின் சுகாதாரத்தை நாம் கடைப்பிடித்தே ஆகவேண்டும்.

உற்பத்தி அறுவடைக்குத் தயாராகும் போது குறிப்பிட்ட பிரதேசத்திற்குரிய தேவையை முன்கூட்டியே பெற்றுக்கொண்டால் அவர்களுக்கு தேவையான பொருட்களை பொதிசெய்து விற்பனைசெய்ய முடியும். அந்த வகையில் அந்தந்த பகுதிக்கான தேவைகளை இனங்கண்டு குறிப்பிட்ட உற்பத்தியாளர்களை அவர்களுக்கு உற்பத்திப் பொருட்களை விநியோகிக்க விடுவதன் மூலம் வைரஸ் தொற்று பரந்து பட்டு நடைபெறாது தவிர்த்துக் கொள்ளலாம்.

இத்துடன் விநியோகிக்கும் வாகன சாரதி மற்றும் அவருடன் பயணிப்பவர், மோட்டார் சைக்கிளில் விற்பவர்களின் தகவல்கள் என்பன முறையாக பராமரிக்கப்பட்டு அவர்களுக்கு வெப்பநிலை மற்றும் அறிகுறிகள் பற்றி பரிசோதனைகளை செய்து விட்டு விநியோகிக்க அனுமதி வழங்கலாம்.


இதனை பிரதேச சபைகள் அல்லது அந்தந்த பகுதி கிராம உத்தியோகத்தர்கள் நெறிப்படுத்தலாம்.

உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கான உரிய விலையை உற்பத்தியாளன் பெறும் அதேவேளையில் கொள்வனவு செய்பவர்களுக்கும் பாதுகாப்பானதாக உரிய தரமான பொருளை தினந்தினம் பெறக் கூடியதாக இருக்கும். மாறாக கடந்த கொரோனா காலத்தின் போது உற்பத்தியாளர்களை தெருவோரங்களில் எந்தவித வசதியுமின்றி விற்பதற்காக வைத்திருந்தமையையும் அவர்களுக்கான எந்தவித பாதுகாப்பு நடைமுறைகளும் கடைப்பிடிக்க முடியவில்லை என்பதனையும் கவனத்திற் கொள்க.

தற்போது பரவும் வைரஸ் மிகவும் தீவிரமானதாக மருத்துவத்துறையும் நுண்ணங்கியியல் வல்லுநர்களும் கூறியிருப்பதனை கவனத்திற் கொண்டால் இவ்வாறான தேவையற்ற சவால்களை நாம் எதிர்கொள்ளாது தவிர்த்துக் கொள்ளலாம்.

எம்மிடமுள்ள மொபைல் தகவல் தொழில்நுட்பத்தினை சிறப்பாக பயன்படுத்துவதற்கான புதிய கண்டுபிடிப்புக்களை இளையவர்களிடமிருந்து பெறுவதற்காக அவர்களை ஊக்குவிக்கும் போது இன்னும் இலகுவாக எமது சுகாதாரத்திற்கு எந்தவித பாதிப்புமின்றி நாம் தினந்தோறும் கடமையில் ஈடுபடலாம்.

**இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 302**



# மினுவாங்கொட, பேலியகொட கொத்தணி; தொற்றாளர் எண்ணிக்கை 9 ஆயிரத்தை கடந்தது

(கொழும்பு)

நாட்டில் நேற்று முன்தினம் தொற்று உறுதியாகிய 383 பேர் மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொத்தணியில் தொற்றுறுதியான நோயாளர்களுடன் தொடர்புடையவர்கள் என அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இதற்கமைய, மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொத்தணியில் பதிவான நோயாளர்கள் எண்ணிக்கை 9 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

குறித்த இரண்டு கொத்தணிகளில் தொற்றுறுதியானவர்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்து 92 ஆக உயர்வடைந்துள்ளது. இந்த எண்ணிக்கையுடன், நாட்டில் இதுவரையில் கொவிட்-19 தொற்றுறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 570 ஆக அதிகரித்துள்ளது. (நி)

# இலங்கை மாணவன் மீது போலிக்குற்றச்சாட்டு சிக்க வைத்தவருக்கு 4 வருட சிறைத்தண்டனை

(கன்பெரா)

இலங்கை மாணவர் ஒருவரை போலிக்குற்றச்சாட்டுக்களை புனைந்து, பொலிஸாரிடம் சிக்க வைத்த அஸ்லான் கௌஜாவுக்கு நியூசவுத் வேல்ஸ் நீதிமன்றம் நான்கரை வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

UNSW-இல் மேற்படிப்பை தொடர்ந்துகொண்டிருந்த மாணவனை, காதல் விவகாரத்தினால் பொறாமை கொண்டு அஸ்லான் கௌஜா, குறிப்பிட்ட மாணவர் முன்னாள் பிரதமர் மல்கம் டேர்ன்புல்லை கொலை செய்யத் திட்டமிட்டார் என்றும் Opera House-ற்கு குண்டு வைக்க திட்டமிட்டார் என்றும் குற்றச்சாட்டுக்களை புனைந்து, பொலிஸில் சிக்கவைத்துள்ளார்

இந்த குற்றச்சாட்டுக்களின் பிரகாரம் உடனடியாக கைது செய்யப்பட்ட குறிப்பிட்ட இலங்கை மாணவன், அவுஸ்திரேலியாவின் அதி உயர் பாதுகாப்பு சிறையில் ஒரு மாத காலம் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்னர், அத்தனை குற்றச்சாட்டுக்களும் மீளப் பெறப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

இந்த நாடகத்தின் பின்னணியில் இயங்கியவர் என்று அஸ்லான் கௌஜா கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட பின் பிணையில் விடுவிக்கப்பட்டார். அந்தக்காலப்பகுதியில் தனக்கு எதிரான சாட்சிகளை மிரட்டினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு பின்னர் கைது செய்யப்பட்டார்.

அதன்பின்னர், அஸ்லான் கௌஜா தனது குற்றங்கள் அனைத்தையும் ஒப்புக் கொண்டார். இந்த வழக்கின் மீதான தீர்ப்பை வழங்கிய நீதிமன்றம் மேற்படி சிறைத்தண்டனையை வழங்கியுள்ளது.

இந்த சிக்கலில் மாட்டிவிடப்பட்டு, சிறையிலிருந்து விடுதலையாகி, இலங்கை சென்ற மாணவன் இந்த ஒட்டுமொத்த விவகாரம் தொடர்பில் நீதியான, சுதந்திரமான விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருந்தார்.

எந்தக்குற்றமும் செய்யாத தன்னை பயங்கரவாதி என்று முத்திரை குத்தியதால் தனது தனிப்பட்ட வாழ்க்கை பாரதூரமாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்திருந்தார்.

இந்த சம்பவம் இடம்பெற்ற பின்னர், தான் திருமணம் செய்யவுள்ள பெண்ணிடம் அமெரிக்காவுக்கு செல்ல முடியாதபடி தனது அமெரிக்க விசா இரத்துச் செய்யப்பட்டதையும் சுட்டிக்காட்டியிருந்தார். (நி)


## யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம் அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளுக்கு அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. யா/ நல்லூர் ஸ்தான சி.சி.த.க பாடசாலை - வகை II
2. யா/ யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை - வகை III

**தகைமைகள்:**

- வகை II பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவை தரம் II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- வகை III பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவை தரம் III ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

❖ விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் ஆகக் குறைந்தது மூன்றாண்டு காலம் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.

❖ விண்ணப்பதாரி தற்போது அதிபராகக் கடமையாற்றும் பாடசாலையில் 03 வருட சேவையை நிறைவு செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். பொருத்தமான அதிபர் தரத்தினையுடைய பாடசாலையை சேவை நிலையமாகக் கொண்டிராதவர்களும் உதவி,பிரதி அதிபராகக் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களும் இந் நிபந்தனைக்கு உட்பட மாட்டார்கள்.

வலய மட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடத்தப்படுகின்ற நேர்முகப் பரீட்சையின் புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிடம் நிரப்பப்படும்.

குறிப்பு:

❖ மேற்படி பதவிகளுக்கு யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்பப் படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று , பூரணப்படுத்தி, பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை 25.11.2020 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் வலயக் கல்விப் பணிப்பாளர் , யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம், செம்மணிவீதி, நல்லூர் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் அதிபர் பதவிக்கான விண்ணப்பம் -2020 எனக் குறிப்பிடவும்.

**திரு. செல்வரட்ணம் சந்திரராஜா**
**வலயக் கல்விப் பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்,**
**செம்மணி வீதி, நல்லூர்.**

(C-642)


# கொரோனா வைரஸ், காற்று மாசு; முகக் கவசம் கட்டாயம்

(கொழும்பு)

**காற்றின் தரக்குறியீடு தற்போது 90-150 வரம்பிற்கு இடையில் இருப்பதால் சுவாசநோய் உள்ளவர்கள் மிகவும் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.**

தற்போது கொரோனா வைரஸ் தொற்றால் மக்கள் அவதியுறும் இவ்வேளை, வளிமண்டலத்திலுள்ள காற்றும் மாசுபட்டுக் காணப்படுகிறது. எனவே, அவதானமாக இருக்குமாறு மக்கள் வேண்டப்படுகின்றனர்.

இலங்கையின் வளிமண்டலத்தில் மாசுத்தன்மை காணப்படுவதாகத் தேசியக் கட்டட ஆராய்ச்சி அமைப்பின் (நோப்ரோ) காற்றுத் தரப் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கை, பருவமழைக்கு இடையிலான மழை நிலையை கொண்டிருப்பதால், பல நாடுகளிலிருந்து வீசுகின்ற காற்று இலங்கை வருவதன் காரணமாக வளிமண்டலம் மாசுபடுகின்றதென காற்று தர பிரிவு கூறுகிறது.

காற்றின் தரக் குறியீடு தற்போது 90-150 வரம்புக்கு இடையில் இருப்பதாகவும் இதன் விளைவாக கொழும்பு, கண்டி, புத்தளம், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்கள் மோசமான காற்றின் தரத்தால் சூழப்பட்டுள்ளதாகவும் இந்நிலை மேலும் சில நாட்களுக்கு நீடிக்கக் கூடுமென்பதால் சுவாச நோய் உள்ளவர்கள் மற்றும் பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

முக்கியமான இந்தக்காலத்தில் சகல மக்களும் முகக் கவசங்களை மறக்காமல் அணியுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (நி)

# பூர்த்தி செய்யப்படாத பாடத்திட்டங்கள் தொடர்பில் அறிக்கை கோரல்

(கொழும்பு)

கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான பாடத்திட்டங்கள் எதுவரையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பது தொடர்பில் அறிக்கையொன்றைக் கோருவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஊடாக அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில், ஒவ்வொரு பாடத்திட்டத்தையும் பூர்த்தி செய்துள்ள வீதம் மற்றும் பாடத்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு எடுக்கப்பட்டுள்ள திட்டங்கள் குறித்தும் மீளாய்வு செய்யப்படவுள்ளது.

எதிர்வரும் ஜனவரி மாதம் 17 ஆம் திகதி முதல் கல்வி பொதுத்தராதர சாதாரண தர பரீட்சை ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அரசியல் காழ்ப்புணர்ச்சி வேண்டாம் ஒத்துழைப்பே தேவை

(ஹற்றன்)

எமது நாட்டில் கொரோனா தொற்று ஆரம்பித்த போது உள்ளூராட்சி நிறுவனம் என்ற ரீதியில் அட்டன்-டிக்கோயா நகர சபையின் ஊடாக பிரதேச மக்களை பாதுகாக்கும் பொருட்டு தொடர்ச்சியாக பல்வேறு நோய்த்தடுப்பு சுகாதார நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தோம்.

ஆனால் இன்று சிலர் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக எம்மை விமர்சிக்கின்றனர்.

இந்த இக்கட்டான நெருக்கடி நேரத்தில் ஒத்துழைப்பு தர வேண்டுமே ஒழிய குறை கூறி திரியக்கூடாது என அட்டன்-டிக்கோயா நகர சபைத் தலைவர் எஸ்.பாலசந்திரன் தெரிவித்தார். (நி)

# யாழ்.மாவட்ட சமுர்த்தி அலுவலகத்திற்கு கடற்றொழில் அமைச்சர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று யாழ். மாவட்ட சமுர்த்தி அலுவலகத்திற்கு விசேடமாக வருகை தந்து பணிப்பாளர் உள்ளிட்ட பணிக்குழுவினரை சந்தித்து பதரப்பட்ட சமுர்த்தி வேலைத் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடினார்.

ஜனாதிபதியின் "சுபீட்சத்தின் நோக்கு" என்னும் தொனிப் பொருளில் யாழ்.மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வரும் வேலைத் திட்டங்களான மனைப் பொருளாதார போசணையினை மேம்படுத்தி குடும்ப அலகினை வலுவூட்டும் தேசிய வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கைத் திட்டம், சமுர்த்தி பயனாளிகளை வலுவூட்டுவதற்கான ஆய்வு வேலைத் திட்டம் முதலான வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார்.

சமுர்த்தி ஆளணி வெற்றிடங்கள் தொடர்பாக உரிய தரப்புகளுடன் தொடர்பு கொண்டு தீர்வினைப் பெற்றுத் தருவதாகவும் உறுதியளித்தார்.

பெண்தலைமைத்துவ குடும்பங்கள், வறிய கடற்றொழில் குடும்பங்கள் ஆகியவற்றுக்கு சமுர்த்தி வேலைத்திட்டத்தின் ஊடாக பெற்றுக் கொடுக்கக் கூடிய வாழ்வாதார உதவிகள், இலகு கடன் திட்டங்கள் என்பன பற்றியும் உரிய அதிகாரிகளோடு பேசி தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். அத்தோடு சமுர்த்தி வேலைத் திட்டத்துக்கு தேவைப்படும் நிதி ஒதுக்கீடுகளின் கிடைப்பனவுகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பிலும் கவனம் செலுத்தினார்.

கொவிட்-19 தொற்று அபாயச் சூழலில் மார்ச், ஏப்ரல், மே, மாதங்களில் சமுர்த்தி முகாமையாளர்கள், உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளும் வழங்கிய நலனுதவிச் சேவைக்கு வாழ்த்து தெரிவித்ததோடு கொவிட்-19 தொற்று அபாய சூழலிலும் மக்களுக்கான சேவை தடையின்றி கிடைக்க உத்தியோகத்தர்கள் மென்மேலும் பணியாற்ற வேண்டிய அவசிய தேவையினையும் நினைவூட்டினார். (5)

# மாணவர்களுக்கான கல்வி சார் நடவடிக்கைகள்

(யாழ்ப்பாணம்)

மத்திய கல்வி அமைச்சினால் ஒழுங்குபடுத்தப்பட்ட குருகுலம் கல்வித் தொலைக்காட்சி ஒளிபரப்புக்கள் நேத்ரா தொலைக்காட்சி ஊடாக ஒளிபரப்புச் செய்யப்படுகின் றன.


இந்நிகழ்ச்சியின் நேர அட்டவணையை w.w.w. face book. com/nppde எனும் மாகாணக் கல்வித்திணைக் களத்தின் முகப்புத்தகத்தின் ஊடாகவும் நாளாந்தம் பத்திரி கைகள் மூலமாகவும் அறிய முடியும்.

மேலும் வடக்கு மாகாணக் கல்வி திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட கற்றல் காணொளிகளையும் கற்றல் சாதனங்களையும் www.edudept. np.gov.lk எனினும் முகவரியில் Learning Materials, Model Papers ஆகிய தலைப்புகளின் கீழ் பார்வையிடலாம்.

அத்துடன் www.youtube.com/c/lmdmunit அல்லது www.youtube.com/c/channelnie ஆகிய youtube அலைவரிசையூடாக பார்வையிட முடியும்.

மேலும் google play store மூலம் தரவிறக்கக்கூடிய EMIS NP எனும் தொலைபேசி செயலி ஊடாகவும் மாணவர்கள் கற்றல்வளங்களை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் வடக்கு மாகாணக்கல்வி பணிப்பாளர் செ.உதயகுமார் அறிவித்துள்ளார். (5-4)


# வீதி மீளத் திறப்பு




(குப்பிழான்)

வீதிப் புனரமைப்பு வேலைகளுக்காக கடந்த இரண்டு நாட்களாக மூடப்பட்ட அளவெட்டி-கீரிமலை வீதி இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மீளத் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வீதி மூடப்பட்டமையால் இவ் வீதியைப் பயன்படுத்தும் நூற்றுக்கணக்கானோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியதை அவதானிக்க முடிந்தது. எனினும் வீதி புனரமைக்கப்படுகின்றமை நல்ல விடயமே என மக்கள் தெரிவிக்கின்றனர்.(5-4-18)



மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தின் கிராம உத்தியோகத்தர்களுக்கான பதில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றிய இலுப்பைக் கடவை கிராம உத்தியோகத்தரான எஸ்.விஜியேந்திரன் (வயது-55) என்பருடைய கொலையை கண்டித்தும் படுகொலைக்கு நீதி வேண்டியும் குற்றவாளிகள் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும் எனக் கோரியும் மாந்தை மேற்கு பிரதேச செயலக பணியாளர்கள் நேற்று வெள்ளிக்கிழமை காலை கறுப்புப்பட்டி அணிந்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர். படம்:-மன்னார் செய்தியாளர்)

# தனிமைப்படுத்தியவர்களைத் தாக்கியவர் குடும்பத்தோடு தனிமைப்படுத்தப்பட்டார்

(கரணவாய்)

கொரோனா கட்டுப்பாட்டுக்காக தனிமைப்படுத்தப்பட்டிருந்த வளாகத்தினுள் அத்துமீறி நுழைந்து தனிமைப்படுத்தப்பட்டிருந்தவரை தாக்கமுற்பட்டவர் பொதுச் சுகாதார பரிசோதகர் களால் இனங்காணப்பட்டு குடும்பத்துடன் தனிமைப்படுத்தப்பட்டதுடன், தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமைக்கான சட்ட நடவடிக்கையும் எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்று பருத்தித்துறையில் இடம்பெற்றது.

கொரோனா தொற்றாளருடன் நேரடித்தொடர்பிலிருந்த சகபணியாளர்கள் ஐந்து பேர் குறிப்பிட்ட நிறுவனத்தினுள் அப்பகுதி பொதுச்சுகாதார பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்டினால் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு நபரொருவர் தனிமைப்படுத்தப்பட்ட அவ் வளாகத்தினுள் அத்துமீறி நுழைந்து கல்வீசித்தாக்குதல் நடத்தியதோடு தனிமைப்படுத்தப்பட்டிருந்த நபர் ஒருவரை உள்ளே சென்று தாக்கவும் முயற்சித்துள்ளார்.

இச்சம்பவம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்தபோது குறித்த நபர் தப்பிச் சென்றுள்ளார்.

குறித்த சம்பவத்தை தனது கைத்தொலைபேசியில் காணொளியாக்கிய அங்கு தனிமைப்படுத்தப்பட்டிருந்த இன்னொருவர் அப்பகுதி பொது சுகாதார பரிசோதகருக்கு அனுப்பியுள்ளார்.

குறித்த காணொளி ஆதாரத்தைக்கொண்டு விசார ணையில் ஈடுபட்ட பொதுச் சுகா தார பரிசோதகர் பொதுமக்கள் மற்றும் கிராம உத்தியோகத்தரின் உதவியுடன் சம்மந்தப்பட்ட நபரின் வீட்டை இனங்கண்டு குறித்த நபரை விசாரணைகளுக்கு உட்படுத்தினர்.

இதைத்தொடர்ந்து கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டு குறித்த நபரை குடும்பத்தோடு தனிமைப்படுத்தியுள்ளனர்.(5-4-60)

# 1000 மில்லியன் ரூபாய் செலவில் யாழில் காப்பெற் வீதி

(யாழ்ப்பாணம்)

நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடம் யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் யாழ்.மாவட்ட வீதி அபிவிருத்திகள் தொடர்பில் முன்மொழிந்தமைக்கு அமைவாக 1.60 கிலோ மீற்றர் தூரமுடைய யாழ்ப்பாணம் - கடற்கரை வீதி 488.4 மில்லியன் ரூபாய் செலவில் சீரமைக்கப்படவுள்ளது. 5.503 கிலோமீற்றர் நீளமுடைய வல்லை-உடுப்பிட்டி - வல்வெட்டித்துறை வீதி 507.50 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் சீரமைக்கப்படவுள்ளது.

நாட்டில் ஒரு இலட்சம் கிலோமீற்றர் வீதிகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தில் வடக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட நான்கு வீதிகளை சீரமைக்கும் பணிகளை நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவால் நேற்று வெள்ளிக்கிழமை மாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. (5-4)

# ஹோமம்,பூஜை வழிபாடுகள்

(குப்பிழான்)

நம் நாட்டிலும் உலகெங்கிலும் வாழுகின்ற மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக அருளாசி வேண்டி நாளை மறுதினம் திங்கட்கிழமை கிளிநொச்சி கந்தன் குளம் செல்வாநகரிலுள்ள ஓம் சக்திவேலன் ஆலயத்தில் மஹாம்ருத்யுஞ்சய ஹோமம் மற்றும் விசேட பூஜை, பிரார்த்தனை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களுடன் மாத்திரம் மேற்படி வழிபாடுகள் நடைபெறும். எனவே, அடியவர்கள் தங்கள் வீடுகளில் இருந்தவாறே கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து மீள்வதற்காக அருளாசி வேண்டிப் பிரார்த்தனை வழிபாடுகளில் ஈடுபடுமாறு ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. (5-18)

# சந்தையில் வெள்ள நீர் தேக்கம்; பெரும் சிரமத்தில் மக்கள்

(குப்பிழான்)

மருதனார்மடம் பொதுச் சந்தையில் புதிய சந்தைக் கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டுள்ள போதிலும் வியாபாரிகளுக்கான இட ஒதுக்கீட்டுப் பிரச்சினையால் மேற்படி கட்டடத் தொகுதி திறக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் மழை காலங்களில் சந்தையில் வியாபாரம் மேற்கொண்டு வரும் வியாபாரிகளும், சந்தைக்கு வரும்



நுகர்வோரும் சந்தையில் வெள்ளநீர் தேங்கி நிற்பதால் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். (5-4-18)

# பேருந்து கட்டணம் அதிகரிப்பது தொடர்பில் எந்தவித தீர்மானமும் இல்லை



(கொழும்பு)

பேருந்து கட்டணத்தை அதிகரிக்குமாறு பேருந்து சங்கங்கள் கோரியிருக்கின்ற போதும் தற்போதைய நிலையில் பேருந்து கட்டணம் அதிகரிக்க எந்த தீர்மானமும் இல்லை என்றாலும் கொவிட் போக்குவரத்து கொள்கையின் பிரகாரம் பேருந்து கட்டணங்களில் சிறிய தொரு மாற்றம் ஏற்பட்டாலும் அது தற்காலிகமானதாகும் என போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

பேருந்து கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு இலங்கை தனியார் போக்குவரத்து சங்கம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் முன்வைத்திருந்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டின் தற்போதைய நிலைமையில் பேருந்து கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு பேருந்து சங்கங்கள் கோரிக்கை விடுத்திருக்கின்ற போதும், பேருந்து கட்டணம் அதிகரிப்பது தொடர்பில் எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை.

பேருந்து சங்கங்களின் கோரிக்கைகள் தொடர்பில் அந்த சங்கங்களுடன் கலந்துரையாடி, ஒரு சில இணக்கப்பாடுகளுக்கு வந்திருக்கின்றோம்.

அதன் பிரகாரம் எதிர்வரும் வாரங்களுக்குள் கொவிட் போக்குவரத்து கொள்கை ஒன்றை தயாரிக்க இருக்கின்றோம்.

சுகாதார பிரிவின் ஆலோசனைக்கமைய கொவிட் 19 கொள்கையின் பிரகாரம் பேருந்துகள் போக்குவரத்தில் ஈடுபடும் போது பயணிகளின் பாதுகாப்பு தொடர்பில் கூடுதலாக அவதானம் செலுத்தப்படும்.

அத்துடன் கொவிட் போக்குவரத்து கொள்கையின் பிரகாரம் பேருந்து கட்டணங்களில் சிறிய தொரு மாற்றம் ஏற்பட்டாலும், கொவிட் அச்ச நிலைமை இல்லாமலாகி இருப்பது உறுதி செய்யப்பட்ட பின்னர், பேருந்து கட்டணம் மீண்டும் முன்னர் இருந்த பிரகாரம் அறவிடப்படும்.

ஏனெனில் தற்போதைய நிலைமையில் பயணிகள் தொடர்பாக கவனம் செலுத்துவது போல பேருந்து உரிமையாளர்கள் தொடர்பாகவும் நியாயமாக சிந்திக்கவேண்டும்.

அதன்பிரகாரம் இரண்டு தரப்பினரும் சங்கடமான நிலைமைக்கு ஆளாகாதவகையில் தீர்மானம் மேற்கொள்வேண்டி இருக்கின்றது.

அத்துடன் தற்போது இடம்பெற்றுவரும் கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை நேற்றுடன் முடிவடைந்தது. அதன் பின்னர் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கும் பிரதேசங்களில் பேருந்து மற்றும் புகையிரத போக்குவரத்துகள் நிறுத்தப்படும்.

உயர்தர பரீட்சை காரணமாகவே ஊரடங்கு காலப்பகுதியிலும் பேருந்து மற்றும் புகையிரத சேவைகள் இடம்பெற்றன. அதன்பின்னர் அந்த சேவைகள் இடம்பெற வேண்டிய தேவையிருக்காது என்றார். (நி)

## ரிஜ்வே வைத்தியசாலையில்

# 20 சிறுவர்கள், 12 கர்ப்பிணிகளுக்கு தொற்று உறுதியானது

(கொழும்பு)

கொழும்பு ரிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் இதுவரை 32 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் ஜி.ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, "கொரோனாவைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் என்று அடையாளம் காணப்பட்டவர்களில் 20பேர் சிறுவர்கள், 12பேர் கர்ப்பிணிகள் ஆவர். மேலும், வைத்தியசாலையில் பணிபுரிந்த வைத்தியர் ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது.

ஆனாலும் அவர், வைத்தியசாலையில் வைத்து கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகவில்லை. இதேவேளை சிகிச்சை பெறுவதற்காக வைத்தியசாலைக்கு வருகைதருவோர் குறித்த காரணங்களினால் ஒருபோதும் அச்சம் கொள்ளத் தேவையில்லை" என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# வத்தளை தொழிற்சாலையில் மேலும் 68 பேருக்கு தொற்று

(வத்தளை)

வத்தளை, கெரவலப்பிட்டியில் அமைந்துள்ள தொழிற்சாலையொன்றில் மேலும் 68 ஊழியர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

குறித்த தொழிற்சாலையின் 117 ஊழியர்கள் இதுவரை கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

தொழிற்சாலையின் 49 ஊழியர்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியமை முன்னதாக கண்டறியப்பட்டது.

அதன் பின்னர் தொழிற்சாலையின் அனைத்து ஊழியர்களிடம் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளின் மூலமே இந்த தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு கொரோனா தொற்றுக்குள்ளான நபர்களுடன் தொடர்புகளை பேணிய சுமார் 3000 பேர் சுய தனிமைப்படுத்தலிலும் உள்ளனர். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: செவ் 5 இல் உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி பட்டதாரி பயிலுநர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/11366 | பிறப்பு: 1995 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: செவ் 8 இல் உயரம்: 163cm<br>தகைமை/தொழில்: BA Following (External)<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகத்தர்<br>தொ.இ: G/11397 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>கி.பா: 28 1/2 செவ் 11 இல் உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. அரச உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11367 | பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 2<br>கி.பா: 38 3/4 செவ் 11 இல்<br>தகைமை/தொழில்: PHD in Singapore<br>எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர் போன்றோர் சைவபோசனம் மட்டும்<br>தொ.இ: G/1474 |
| பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 65 சூரி. செவ் 7 இல் உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. வெதுப்பக கணக்காளர்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/11369 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 79 செவ் 8 இல் உயரம்: 4.6<br>தகைமை/தொழில்: பட்டதாரி வக்கீல்<br>எதிர்பார்ப்பு: வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், வக்கீல் போன்றோர்<br>தொ.இ: G/1501 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 14 3/4 செவ் 6 இல் உயரம்: 175cm<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. மேசன் வேலை, சிற்பவேலை<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/11370 | பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 4<br>கி.பா:20 செவ் 12 இல் உயரம்: 5.7<br>தகைமை/தொழில்: பட்டதாரி அரச கணக்காளர் (லண்டன்)<br>எதிர்பார்ப்பு: மொறட்டுவ பல்கலைக்கழக பட்டதாரி பொறியியலாளர், கணக்காளர், போன்றோர்<br>தொ.இ: G/1511 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# அகவை அறுபதில் சேவைநலன் பாராட்டு



திருமதி. இவோன் சறோஜினி யோகசிங்கம்
(B.A, P.G.D.E, SLTS-I)

10.03.1989-14.03.2003 - கொ/ஹோலி ரோசறி தமிழ் வித்தியாலயம்
15.03.2003-13.05.2015- கொ/மத்திய இந்து மகா வித்தியாலயம்
14.05.2015-06.11.2020 -யா/சென் மேரிஸ் வித்தியாலயம்

சேவையிலிருந்து ஓய்வு பெறும் எமது ஆசிரியர் அவர்கள் தனது ஓய்வுக் காலத்தில் புகழோடும், குடும்ப மகிழ்வோடும் எல்லா நலன்களும் பெற்று நீடூழிவாழ மணிவிழா நன்னாளில் மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: பதில் அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.
யா/சென் மேரிஸ் வித்தியாலயம்

(4557)

# இந்திய மீனவர்களுடன் தொடர்பை பேணுபவர்களை கண்டறியுங்கள்

(கிளிநொச்சி)

இந்திய மீனவர்களுடன் ஆழ்கடலில் வியாபார மற்றும் இதர தொடர்புகளைப் பேணுபவர்கள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு கடற்படையினர் மற்றும் கடற்றொழிலாளர் சமாசம் என்பவற்றிற்கு முல்லைத்தீவு மாவட்ட செயலர் க.விமலநாதன் உத்தரவிட்டுள்ளார்.



முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கொரோனா அவசரநிலை தொடர்பான கலந்துரையாடலின் போதே இவ்வாறு உத்தரவிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இங்குள்ள மீனவர்கள் சிலர் ஆழ்கடலில் இந்திய மீனவர்களுடன் தொடர்பினைப் பேணுவதாகவும் கஞ்சா போன்ற போதைப் பொருட்கள் பரிமாற்றங்கள் இடம்பெறுவதாகவும் தகவல்கள் கிடைக்கின்றன.

இவ்வாறு இந்திய மீனவர்களுடன் தொடர்பினைப் பேணுபவர்கள் குறித்து கவனத்துடன் செயற்பட வேண்டும்.

இந்தியாவைப் பொறுத்த வரையில், அங்கு பாரிய அளவில் கொரோனாத் தொற்றுக்கள் பரவியிருக்கின்றன. எனவே இந்திய மீனவர்களுடன் தொடர்பினைப் பேணுபவர்கள் ஊடகவும் கொரோனாத் தொற்றுக்கள் பரவக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

ஆகவே அவ்வாறானவர்களை இனங்கண்டு தனிமைப்படுத்தவும் அவர்களுக்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் சமாசம் மற்றும் கடற்படையினர் கூடுதல் கவனத்துடன் செயற்படவேண்டும் எனத் தெரிவித்தார்.(5-4)

# வர்த்தமானி வெளியிடப்பட்டும் அரிசி விலைகளில் மாற்றமில்லை

(குருமன்காடு)


அரிசிக்கான விலைகள் தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டிருந்த போதிலும் வவுனியா மாவட்டத்தில் அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யப்படுகின்றது.

நுகர்வோர் அபிவிருத்தி அதிகார சபையின் வேண்டுகோளுக்கமைய அவித்த மற்றும் அவிக்காத சிவப்பு மற்றும் வெள்ளை சம்பா அரிசி கிலோ ஒன்றின் அதிகபட்ச சில்லறை விலை 94 ரூபாவாகவும் அவித்த நாட்டரிசி ஒரு கிலோவின் விலை 92 ரூபாவாகவும் வெள்ளை மற்றும் சிவப்பு பச்சை அரிசி கிலோ ஒன்றின் விலை 89 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டு புதன்கிழமை வர்த்தமானி அறிவித்தல் வெளியாகியிருந்தது.

எனினும், வவுனியா மாவட்டத்திலுள்ள வர்த்தக நிலையங்களில் அரசியின் வர்த்தமானி அறிவித்தலை மீறி அதிக விலைகளில் அரிசிகள் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் அரிசி ஆலைகளும் அதிக விலைகளுக்கே வர்த்தக நிலையங்களுக்கு விற்பனை செய்கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இதன் காரணமாக மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் வவுனியா மாவட்ட நுகர்வோர் அதிகார சபையினர் தீர்க்கமான முடிவை அறிவிக்க வேண்டும் என மக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (5-4-250)



கொரோனாத் தொற்றிலிருந்து அனைவரையும் பாதுகாக்க வேண்டி மன்னார் நகர ஜும்மா பள்ளிவாசலில் "து ஆ" பிரார்த்தனை நேற்று முன்தினம் நடைபெற்றது.

# பயிர்களுக்கான காப்புறுதித்திட்ட ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது

(குருமன்காடு)

வவுனியா மாவட்ட விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு வவுனியா மாவட்ட கமக்கார ஒழுங்கமைப்புக்களின் சம்மேளனமும் சனச ஜெனரல் இன்ஷூரன்ஸ் நிறுவனத்தினரும் இணைந்து காப்புறுதித் திட்ட ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளனர்.



வவுனியா புகையிரத நிலைய வீதியில் அமைந்துள்ள வவுனியா மாவட்ட கமக்கார ஒழுங்கமைப்புக்களின் சம்மேளனத்தின் மாவட்ட காரியாலயத்தில் நேற்று இவ் ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டது.

நெல், உழுந்து, கச்சான், சோளம் போன்ற பயிர்களுக்கும் பப்பாசி, வாழைச்செய்கைக்கும் ஆடு, மாடு, கோழி போன்ற கால்நடைகளுக்குமான காப்புறுதித்திட்டமே இவ்வாறு கைச்சாத்திடப்பட்டது.

ஓர் விவசாயி 5 ஏக்கருக்கு காப்புறுதியினை மேற்கொள்ள முடிவதுடன் ஒரு ஏக்கருக்காக காப்புறுதி தொகை 1500 ரூபா தொடக்கம் 1800 வரையில் செலுத்த வேண்டும். மேலும் வெள்ளம், வரட்சி, நோய்கள், வன விலங்குகளின் அச்சுறுத்தல் போன்றவற்றிக்கு காப்புறுதியினை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காப்புறுதி தொடர்பான மேலதிக விடயங்களுக்கு விவசாயிகள் வவுனியா மாவட்ட கமக்கார ஒழுங்கமைப்புக்களின் சம்மேளன காரியாலயத்தினை தொடர்பு கொள்ளுமாறும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-250)

# வீதியோர வியாபாரங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது



(குருமன்காடு)


வவுனியா நகரப் பகுதியில் வீதியோர வியாபார நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

கொவிட்-19 தாக்கத்தை கருத்தில் கொண்டும், வடமாகாண ஆளுநரின் உத்தரவுக்கமையவும் வவுனியா நகர சபையில் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரப் பகுதியில் வீதியோர வியாபார நடவடிக்கைகளுக்கு தடை விதிப்பதாக நகர சபையால் கடந்த வாரம் அறிவிக்கப்பட்ட நிலையில், அதனை மீறி வியாபார நடவடிக்கையில் ஈடுபட்டவர்களின் பொருட்கள் நேற்று நகரசபையால் பறிமுதல் செய்யப்பட்டன.

இதன்படி வீதியோரங்களில் மரக்கறி வகைகள், அழகுசாதனப் பொருட்கள், புடைவைகள் உள்ளிட்ட வர்த்தக நடவடிக்கைகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (5-4-250)





கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள கரைச்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி உள்ளூராட்சி சபைகளின் வரவு-செலவுத்திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் கிளிநொச்சி தமிழரசுக்கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் தமிழரசுக்கட்சியின் தலைவரும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளருமான மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (படங்கள்:- சதீஸ்)

# மாங்குளம் வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சை நிலையம்

(வவுனியா)

வடக்கு மாகாணத்தில் நான்காவது கொரோனா சிகிச்சை நிலையமாக மாங்குளம் ஆதார வைத்தியசாலையின் ஒரு பிரிவு மாற்றப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தினால் இப்பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது.

30 நோயாளர் படுக்கைகளைக் கொண்ட கொரோனா சிகிச்சை நிலையமாக இந்தப் பிரிவு நேற்று முன்தினம் முதல் இயங்க ஆரம்பித்துள்ளமை குறித்து சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மருதங்கேணி பிரதேச வைத்திய சாலை மற்றும் கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரியின் ஒரு பகுதி கொரோனா சிகிச்சை நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளன. அத்துடன், கிளிநொச்சி மாவ ட்டத்தில் கிருஸ்ணபுரம் பகுதியில் 100 படுக்கைகளைக்கொண்ட கொரோனா சிகிச்சை நிலையம் அமைக்கப்படுகிறது. (5)

## இராசிபலன்

7.11.2020
ஐப்பசி 22, சனிக்கிழமை
சப்தமி பின்னிரவு 3.05 மணிவரை
பூசம் பின்னிரவு 5.09 மணிவரை
சுபநேரம் 3.05-4.35 மணிவரை
இராகுகாலம் 9.05-10.35 மணிவரை
சந்திராஷ்டமம்:- பூராடம்

வளவன்


மேஷம்

சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பெற்றோரின் ஆதரவால் பெருமை கூடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுப விரயங்கள் கூடும் நாள்.


ரிஷபம்

தைரியத்தோடு செயற்பட்டு சாதனை படைப்பீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், போசன சுகமுண்டு.


மிதுனம்

வழிபாடு காரிய வெற்றி தரும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.


கடகம்

விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, பயணத்தால் பலனுண்டு, ஆன்றோரின் சந்திப்பு இடம்பெறலாம்.


சிம்மம்

தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், திடீர்ப் பயணமொன்று ஏற்படலாம், சந்தித்த நண்பர்களால் சந்தோசம் காண வேண்டிய நாள், தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்படலாம்.


கன்னி

பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், சகோதர வழியில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


துலாம்

குடும்பத்தினர்களின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம்.


விருச்சிகம்

சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ஆன்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.


தனுசு

குடும்ப பெரியவர்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.


மகரம்

உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


கும்பம்

மறைமுகப் போட்டிகள் மாறும், உறவு-பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.


மீனம்

புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

செய்த பாவங்களுக்குக் கூட உன்னை திருத்தும் ஆற்றல் உண்டு.

# இத்தாலி நிலைமை இலங்கைக்கும் ஏற்படலாம்!

## எச்சரிக்கும் மருத்துவர் சங்கம்

**கொ (கொழும்பு) ரோனா உயிரிழப்பு நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளது. எதிர்வரும் நாட்களில் மேலும் உயர்வடையலாம். அப்படி ஒரு நிலை உருவானால் இத்தாலி நிலைமையே இலங்கைக்கும் ஏற்படுமென மருத்துவர் சங்கம் எச்சரித்துள்ளது.**

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் செயற்பாடுகளில் இலங்கை அரசாங்கம் இராணுவத்தை ஈடுபடுத்திக் குழப்பங்களை உருவாக்குவதாக இலங்கை மருத்துவர் சங்கம் எச்சரித்துள்ளது.

கொரோனா பணி தொடர்பான தமது பரிந்துரைகளை அரசாங்கம் ஏற்கவில்லை என்பதால், அந்தப் பணியில் இருந்து விலகுவதாக நேற்று முன்தினம் அறிவித்திருந்த நிலையில், நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் சந்திப்பு ஒன்று இடம்பெற்றது.

மருத்துவர் சங்கத்தை அரசாங்கம் இரண்டாகப் பிளவுபடுத்தித் தமது அரசியல் தேவைகளைப் பூர்தி செய்வதாகக் குற்றம் சுமத்தியுள்ள சங்கத்தின் செயலாளர் செஹான் பெர்னாண்டோ, ஜனாதிபதி மருத்துவர் சங்கத்தின் பரிந்துரைகளைக் கேட்பதாகத் தெரியவில்லை என்று குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாத்திரம் கொரோனாத் தொற்றினால் ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன் எண்ணிக்கை நாளுக்கு நாள் உயர்வடையலாமென்றும் இத்தாலியில் ஏற்பட்ட நிலைமை இலங்கைக்குக் வரலாமெனவும் மருத்துவர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அரசாங்கம் இராணுவத்தை ஈடுபடுத்தாமல் மருத்துவர் சங்கத்திடம் பொறுப்புகளைக் கையளித்தால் உரிய முறையில் கொரோனாத் தடுப்புப் பணியை முன்னெடுக்க முடியும் என்றும் ஆனால் அரசாங்கம் முழு ஒத்துழைப்பும் தேவைப்படும் வசதிகளையும் செய்துதர வேண்டுமெனவும் மருத்துவர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மருத்துவர் சங்கத்தின் சுயாதீனமான செயற்பாடுகளை முடக்கிச் சுகாதாரத் துறையிலும் அரசியல் தலையீடுகளைச் செய்தால், கொரோனாப் பரவலைத் தடுக்க முடியாதென எதிர்க்கட்சிகள் தெரிவித்துள்ளனர். (நி)

# புதிய வழமைப்படுத்தல் திட்டத்தின்கீழ் நாடு திறக்கப்படலாம் -அஜித் ரோஹண

(கொழும்பு)

புதிய வழமைப்படுத்தல் திட்டத்தின்கீழ், பெரும்பாலும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல், நாடு திறக்கப்படக்கூடும் என பொலிஸ் பேச்சாளர், பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதன்போது, சுகாதார நடைமுறைகளை பின்பற்ற அனைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், ஊடகங்களுக்கு அவர் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல், நாடு திறக்கப்படக்கூடும்.

இந்த சந்தர்ப்பத்தில், உலகில் தற்போது நடைமுறையில் உள்ள எண்ணக் கருவின் அடிப்படையில் செயற்பட வேண்டும்.

புதிய வழமைப்படுத்தல் என்ற அடிப்படையிலான அந்த எண்ணக்கருவுக்கு, உலக சுகாதார ஸ்தாபனத்தினாலும், சில ஒழுங்குவிதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

அதாவது, கொரோனா வைரஸ் பரவல் இருக்கின்ற நிலையில், அதனுடன் வாழ பழகுவது தொடர்பான எண்ணக்கருவே அதுவாகும் என அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் கூற்றுப்படி, மேலும் சுமார் ஒன்றரை வருடங்களுக்கு இந்த நோய்த் தாக்கம் இருக்கும்.

வைரஸ் தொற்று நிலைமைக்கு மத்தியில், அதனைக் கட்டுப்படுத்தி வாழவேண்டிய நிலை உள்ளது.

முகக்கவசம் அணிதல், கைகளை அடிக்கடி கழுவுதல், சமூக இடைவெளியை பேணுதல் என்பனவே, இந்த தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான மிக முக்கியமான உபாயங்களாகும்.

இதற்கமைய, பொதுமக்கள் செயற்படுவார்களாயின், இந்த நோயைக் கட்டுப்படுத்த முடியும் என தாய்லாந்து மற்றும் தாய்வான் முதலான நாடுகள் நிரூபித்துள்ளன.

எனவே, இந்த நோயை கட்டுப்படுத்துவதற்கு, மக்களின் ஒத்துழைப்பு நூற்றுக்கு 100 வீதம் அவசியமாகும் என அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (நி)

# சுற்றுலா சென்றவர்கள் தங்கியிருந்த விடுதிகளில் தனிமைப்படுத்தப்படனர்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து கதிர்காமத்திற்கு சுற்றுலா சென்ற 120 பேரையும் கதிர்காமம் பொது சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று முதல் தொடர்ந்து எதிர்வரும் 14 தினங்களுக்கு தனிமைப்படுத்தியுள்ளனர்.

**கதிர்காமத்திற்கு சுற்றுலா சென்ற மேற்படி 120 பேரும்** அவர்கள் தங்கியிருந்த விடுதிகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக கதிர்காமம் பொது சுகாதாரப் பரிசோதகர் சமன் திசாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் கொழும்பிலிருந்து கதிர்காமத்திற்கு எவ்வகையில் **இந்த 120 பேரும் சுற்றுலா** சென்றார்களென்றும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொழும்பிலிருந்து கதிர்காமம் வந்த சுற்றுலா வாசிகள் குறித்து கதிர்காமம் பொது சுகாதாரப் பிரிவினருக்கு பொதுமக்கள் வழங்கிய தகவலுக்கமைய பொதுச்சுகாதாரப் பிரிவினர் விரைந்து அவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டு அவர்களை அவரவர்கள் தங்கியிருக்கும் விடுதிகளிலேயே தனிமைப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## இரண்டாவது முறையாகவும் பிரதமராக பதவியேற்றார் ஆர்டெர்ன்



(வெலிங்டன்)

தேர்தல் வெற்றியைத் தொடர்ந்து இரண்டாவது முறையாகவும் நியூஸிலாந்தின் பிரதமராக ஜசிந்தா ஆர்டெர்ன் நேற்று வெள்ளிக்கிழமை பதவியேற்றுள்ளார்.

ஜசிந்தா ஆர்டெர்னும் அவரது புதிய அமைச்சர்கள் குழுவும் வெலிங்டன் அரச மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வின்போது ஆங்கிலம் மற்றும் மாவோரி மொழிகளில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

நியூஸிலாந்து பிரதமர் தலைமையிலான புதிய அமைச்சரவையில் எட்டு பெண்கள் உள்ளடங்குகின்றனர்.

கடந்த மாதம் நியூஸிலாந்தில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் 40 வயதான ஆர்டெர்னின் தொழிலாளர் கட்சி மகத்தான வெற்றியை பெற்றது.

கொரோனாவினை கட்டுப்படுத்துவதற்கான ஜசிந்தா ஆர்டெர்னின் முயற்சியினை கருத்திற் கொண்டு மக்கள் அவருக்கு இந்த ஆதரவினை வழங்கினர்.

80 ஆண்டுகளில் நியூசிலாந்தின் தேர்தல் வரலாற்றில் மிகப்பெரிய வெற்றி இதுவென வெலிங்டனில் உள்ள விக்டோரியா பல்கலைக்கழகத்தின் அரசியல் வர்ணனையாளர் சுட்டிக்காட்டியிருந்தார். (நி)

## கட்சிக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை

### விஜய் பரபரப்பு அறிக்கை

(சென்னை)

விஜய் மக்கள் இயக்கம் தற்போது அகில இந்திய தளபதி விஜய் மக்கள் இயக்கம் என்ற பெயரில் கட்சியாக மாற்றி இருப்பது குறித்து நடிகர் விஜய் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

இளைய தளபதி விஜய் தனது மக்கள் இயக்கத்தை கட்சியாக தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்திருப்பதாக இந்திய ஊடகங்களில் தகவல்கள் வெளியாகி பெரும் பரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் தற்போது நடிகர் விஜய், குறித்த கட்சிக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என அரசியல் கட்சி குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

நடிகர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இன்று என் தந்தை எஸ். ஏ.சந்திரசேகர் ஓர் அரசியல் கட்சியை ஆரம்பித்துள்ளார் என்பதை ஊடகங்களின் வாயிலாக அறிந்தேன்.


அவர் தொடங்கியுள்ள கட்சிக்கும் எனக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ எவ்வித தொடர்பும் இல்லை என திட்டவட்டமாக எனது ரசிகர்களுக்கும் பொது மக்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்மூலம் அவர் அரசியல் தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைகளும் என்னைக் கட்டுப்படுத்தாது என்பதை தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

மேலும் எனது ரசிகர்கள். எனது தந்தை கட்சி ஆரம்பித்துள்ளார் என்பதற்காக தங்களை அக்கட்சியில் இணைத்துக்கொள்ளவோகட்சி பணியாற்றவோ வேண்டாம் என கேட்டுக்கொள்கிறேன்.

அக்கட்சிக்கும் நமக்கும் நமது இயக்கத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

இதேவேளை, விஜய் மக்கள் இயக்கம், அகில இந்திய தளபதி விஜய் மக்கள் இயக்கம் என்ற பெயரில் கட்சியாக மாற்றி இருப்பதாகவும் அரசியல் கட்சியை பதிவு செய்ததற்கும், விஜய்க்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்று விஜய்யின் தந்தை எஸ்.ஏ சந்திரசேகர் விளக்கம் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## பேரறிவாளனுக்கான விடுப்பு மேலும் இரண்டு வாரம் நீட்டிப்பு



(சென்னை)

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை கைதியாக இருந்து வரும் பேரறிவாளனுக்கு வழங்கப்பட்ட விடுப்பை மேலும் 2 வார காலம் நீட்டித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவிற்கமைய, கொரோனா வைரஸ் தொற்றை காரணம் காட்டி 30 நாட்கள் அவருக்கு விடுப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், பேரறிவாளனின் விடுப்பு நாளை மறுதினம் முடிவடைகிறது. எனவே மேலும் 30 நாட்கள் விடுப்பை நீட்டிக்கக் கோரி அற்புதம்மாள் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், பேரறிவாளனுக்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவச் சிகிச்சையைத் தொடர வேண்டியுள்ளது. எனவே விடுப்பு காலத்தை நீட்டிக்க வேண்டும் எனக் கோரிக்கை வைத்துள்ளார்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த நீதிபதிகள், மருத்துவச் சிகிச்சையை கருத்தில் கொண்டு பேரறிவாளனுக்கான விடுப்பை வரும் நவம்பர் 23 ஆம் திகதி வரை நீட்டித்து உத்தரவிட்டனர். (நி)

## விலங்குகளைத் தாக்கும் கொரோனா டென்மார்க்கில் முக்கிய நகரங்கள் முடக்கம்



(கோபன்ஹேகன்)

மிங்க் எனப்படும் சிறிய வகை விலங்குகளுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளமை டென்மார்க்கில் உறுதிசெய்யப்பட்டுள்ளமையினைத் தொடர்ந்து அந்நாட்டின் முக்கிய பகுதிகளில் முழுமையான முடக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.


குறித்த ஊரடங்கு நேற்று வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வருவதாகவும், எதிர்வரும் டிசெம்பர் மூன்றாம் திகதி வரை நீடிக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் டென்மார்க்கின் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள மதுபானசாலைகள், உணவகங்கள் மற்றும் உள்ளக விளையாட்டு அரங்குகள் உள்ளிட்டவை மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மிங்க் எனப்படும் குறித்த சிறிய வகை விலங்கினத்திற்கு தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், அவை மனிதர்களுக்கும் பரவக் கூடும் எனும் அபாயத்தின் காரணமாக குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

டென்மார்க்கில் ஏறக்குறைய 17 மில்லியன் மிங்க் இன விலங்குகள் வாழ்ந்து வரும் நிலையில், கூடிய விரைவில் அவை தொடர்பிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் என நெதர்லாந்து அரசாங்கம் அறிவித்துள்ளது. (நி)

## பொய்களை அள்ளி வீசிய ட்ரம்ப் நேரலையை பாதியில் நிறுத்திய ஊடகங்கள்



(வோஷிங்டன்)

தேர்தல் தொடர்பாக ஜனாதிபதி ட்ரம்ப் உரையாற்றிய போது, பல்வேறு அமெரிக்க ஊடகங்கள் நேரலை ஒளிபரப்பை திடீரென நிறுத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதியும் குடியரசுக் கட்சி வேட்பாளருமான டொனால்ட் ட்ரம்ப் பதவியை தக்க வைப்பாரா? அல்லது ஜனநாயக கட்சி வேட்பாளர் ஜோ பைடன் கைக்கு அந்த நாற்காலி சென்று விடுமா? என்பது மில்லியன் டொலர் கேள்வியாக எதிரொலித்து கொண்டிருக்கிறது.

அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கான தேர்தல் கடந்த 3 ஆம் திகதி நடந்தபோது. அந்த நாட்டின் 120 ஆண்டு கால வரலாற்றில் இல்லாத வகையில், 66.9 சதவீத வாக்குகள் பதிவாகி சாதனை படைத்துள்ளதாக அங்கிருந்துவரும் ஊடக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த தேர்தலில் மொத்தம் உள்ள 538 தேர்தல் சபை வாக்குகளில் 270 வாக்குகளை பெற்றவர்தான், அமெரிக்க ஜனாதிபதி பதவியில் அமர்ந்து அதிகாரம் செலுத்த முடியும். வாக்குப்பதிவு முடிந்த உடனேயே வாக்கு எண்ணிக்கை தொடங்கி விட்டது. மிச்சிகன், விஸ்கான்சின் மாநிலங்களை ஜோ பைடன் கைப்பற்றியதைத் தொடர்ந்து அவரது நிலை நேற்று மேலும் வலுப்பெற்றது.

கடைசியாக கிடைத்த தகவல்கள்படி, ஜோ பைடன் ஜனாதிபதி பதவியை கைப்பற்றுவதற்கு மேலும் 6 வாக்குகள் மட்டுமே தேவை. அவர், 264 தேர்தல் சபை வாக்குகளை பெற்று, வெற்றி முகத்தில் உள்ளார்.

அவரை எதிர்த்து கடும் போட்டியை ஏற்படுத்தியுள்ள ட்ரம்ப் 214 வாக்குகளுடன் பின் தங்கி இருக்கிறார். அங்கு பைடனுக்கு 6 வாக்குகள் கிடைத்துவிட்டால் 270 என்ற இலக்கை அவர் எளிதாக அடைந்து விடுவார். வெள்ளை மாளிகையில் அடியெடுத்து வைப்பார் என்று தெரிகிறது.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ட்ரம்ப் ஊடகங்களுக்கு பேட்டி அளித்துக்கொண்டிருந்தார். இதனை அனைத்து ஊடகங்களும் நேரலையாக ஒளிபரப்பு செய்தன.

பேட்டியின்போது பேசிய ட்ரம்ப், ஜனநாயக கட்சியினர் சட்டவிரோத வாக்குகளை பயன்படுத்தி தேர்தல் வெற்றியை எங்களிடம் இருந்து திருட முயற்சிக்கிறார்கள் என கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்தார். சுமார் 17 நிமிடங்கள் தொடர்ந்து பேசிய ட்ரம்ப், திரும்பத் திரும்ப எதிர்க்கட்சி மீது குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இதனால் அதிருப்தி அடைந்த பல்வேறு அமெரிக்க ஊடகங்கள் நேரலையை பாதியில் நிறுத்தி விட்டன. ட்ரம்ப் தவறான தகவல்களை பரப்புவதாகவும் பொய்யான குற்றச்சாட்டுகளை அவர் சுமத்துவதாகவும் அமெரிக்க ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ட்ரம்ப் பேட்டியின் நேரலையை ஊடகங்கள் திடீரென நிறுத்தியது அமெரிக்க மக்களிடையே பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (நி)

# கேகாலையில் அதிகரிக்கும் தொற்றாளர்கள்

(கேகாலை)
கேகாலை மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் தீவிரமாக அதிகரித்து வருகின்றது. மாவட்டத்தின் பிரதான நகரங்களை மையப்படுத்திய பிரதேச செயலகங்களில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர்.

அந்தவகையில், தெரணியகலையில் நேற்று 3 பேர் தொற்றாளர்களாக உறுதி செய்யப்பட்டுள்ளனர். கடந்த 2ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையின் முடிவுகள் நேற்று கிடைக்கப்பட்ட நிலையில் அதில் 3 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவற்றில் தெரணியகலை வித்தியாலய மாவத்தை, உடபொல, மாலிபொட தலாவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள் தொற்றாளர்களாக உறுதிசெய்யப்பட்டுள்ளனர். இந்த தொற்று பேலியகொட மீன்சந்தை கொத்தணி பரவலோடு சம்பந்தப்பட்டதாக அறிய முடிகிறது.

தெரணியகலையில் கடந்த 2ஆம் திகதி முதலாவது தொற்றாளர் மாலிபொட தலாவ பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டார். இவருக்கு பேலியகொட மீன்சந்தையுடன் சம்பந்தப்பட்ட அவிசாவளையில் தொற்றுக்குள்ளான மீனவருடன் தொடர்பை பேணியதால் தொற்றுநியாகியதாக தெரணியகலை பிரதேச சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களில் 12வயது சிறுவனும் உள்ளடங்குவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கேகாலை மாவட்டத்தில் நேற்று மாலை வரை மொத்தமாக 151 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# நஞ்சை உட்கொண்ட குடும்பம் சிறுமி உயிரிழப்பு


(திருமலை)
திருகோணமலை - ஆனந்தபுரி பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேர் நஞ்சு அருந்தியதில் 16 வயது டைய சிறுமி உயிரிழந்துள்ளார்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து பேரே இவ்வாறு விசம் அருந்திய நிலையில், அதில் 16 வயது சிறுமி உயிரிழந்துள்ளார்.

திருகோணமலையில் பொது வைத்தியசாலையில் நேற்று வெள்ளிக்கிழமை காலை ஐவரும் அவசரப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட போதும் 16 வயதுடைய விதுஷிகா எனும் சிறுமி உயிரிழந்தார்.

இதுவரையில் அக்குடும்பத்தினர் நஞ்சருந்தியதற்கான காரணம் தெரியவில்லை என ஆரம்பக்கட்ட விசாரணை மூலம் தெரியவந்துள்ளது. எனினும் திருகோணமலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# அரிசி விலை அதிகரிப்பு செய்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்



(கொழும்பு)
அரிசி வகைகளின் அதிகபட்ச விலையை மீறி விற்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அரிசி விற்பனைக்காக அதிகபட்ச விலையை நிரணயித்து வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய வர்த்தமானியில் குறிப்பிட்டுள்ள விலையினை மீறி விற்பவர்களை நுகர்வோர் விவகார ஆணையகத்தின் அதிகாரிகளின் ஊடாக கைது செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய குருதிக் கொடையாளிகளுக்கு அழைப்பு

(கொழும்பு)
இலங்கையின் பிரதான குருதி வங்கியில் குருதிக்கு தட்டுப்பாட்டு நிலைமை உருவாகியுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் நிலவி வரும் கொவிட்-19 நோய்த் தொற்று நிலைமைகளினால், நோயாளிகளுக்கு குருதி வழங்குவதில் நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளது.

அண்மைக் காலமாகவே இரத்ததான நிகழ்வுகள் நடத்துவதில் பெரும் நெருக்கடி நிலைமை காணப்பட்டதனால் குருதி வங்கியில் போதியளவு கையிருப்பு கிடையாது என இரத்த வங்கியின் பணிப்பாளர் டாக்டர் லக்ஸ்மன் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

ஊரடங்குச் சட்டம் காரணமாக இரத்ததானம் செய்ய வரும் கொடையாளர்களுக்கு வருகை தர முடியாதுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குருதிக்கு நிலவி வரும் தட்டுப்பாட்டை நீக்குவதற்கு கொடையாளர்கள் இரத்ததானம் செய்ய முன்வர வேண்டுமென அவர் மக்களிடம் கோரியுள்ளார். (நி)

# மூடப்பட்ட மீன்சந்தை மீண்டும் திறக்கப்பட்டது



மூடப்பட்ட மீன் சந்தை மீண்டும் திறக்கப்பட்டது.

(திருமலை)
திருகோணமலையில் கொரோனா தொற்று அச்சத்தில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் ஆறு பேர் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் மூடப்பட்டிருந்த திருகோணமலை மத்திய மீன்சந்தை நேற்று வெள்ளிக்கிழமை திறக்கப்பட்டுள்ளது.

மீன்சந்தையுடன் தொடர்புபட்டிருந்த 57 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையின் முடிவுகளின் அடிப்படையில் எவருக்கும் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனினும் திருகோணமலையில் இதுவரையில் 13 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தனிமைப்படுத்தல் பட்டியலில் இருந்து சில இடங்கள் விடுவிப்பு

(கொழும்பு)
கேகாலை மாவட்டத்தில், புளத்கொஹுபிட்டிய பொலிஸ் எல்லைக்குட்பட்ட பகுதிகளில், கலிகமுவ பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகள் யாவும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

கொவிட் -19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் இதனை அறிவித்துள்ளது. கடந்த 2 ஆம் திகதி இரவு முதல் கேகாலை மாவட்டத்தில், மாவனல்லை, ஹெம்மாத்தகம, புளத்கொஹுபிட்டிய பொலிஸ் எல்லைக்குட்பட்ட பகுதிகள், கலிகமுவ பிரதேச சபைக் குட்பட்ட பகுதிகள் யாவும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கொரோனா பரிசோதனைக்கு 20 நிமிடங்கள் போதும்

(கொழும்பு)
நபர் ஒருவர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளாரா? என்பதை கண்டறிய 20 நிமிடங்களுக்குள் உடனடி சோதனைகளை முன்னெடுக்க சுகாதார அமைச்சகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தச்சோதனை முறை பி.சி.ஆர்.பரிசோதனையை விட வேகமாக நோயாளிகளை அடையாளம் காண முடியும் என சுகாதார அமைச்சின் துணை இயக்குநர் வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார். (நி)

# 82 கழிவுக்கொள்கலன்கள் மீண்டும் பிரித்தானியாவிற்கு

(கொழும்பு)
சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டுவரப்பட்ட கழிவுகள் அடங்கிய மேலும் 82 கொள்கலன்களை மீண்டும் பிரித்தானியாவிற்கு அனுப்பி வைக்கவுள்ளதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் இவை மீள் ஏற்றுமதி செய்யப்படவுள்ளதாக சுங்க ஊடகப்பேச்சாளர், மேலதிக சுங்க பணிப்பாளர் சுனில் ஜயரத்ன குறிப்பிட்டார். கழிவுகள் அடங்கிய 242 கொள்கலன்கள் அண்மையில் சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டுவரப்பட்டன.

இவற்றில் கடந்த வாரத்தில் 20 கொள்கலன்கள் பிரித்தானியாவிற்கு மீள் ஏற்றுமதி செய்யப்பட்டதாக சுங்க ஊடகப்பேச்சாளர் குறிப்பிட்டார். (நி)

# 199 பொலிஸ் அதிகாரிகளுக்கு தொற்று

(கொழும்பு)
மேல் மாகாணத்தில் புதிதாக 199 பொலிஸ் அதிகாரிகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக கோவிட்-19 பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய தனிமைப்படுத்தப்பட்ட நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை 258 ஆக உயர்ந்துள்ளதுடன், சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகளின் எண்ணிக்கை 1350 ஆக பதிவாகியுள்ளது. (நி)

# அச்ச நிலையிலும் நடந்து முடிந்த உயர்தரப் பரீட்சை



(கொழும்பு)
கொரோனா வைரஸ் அச்ச நிலைமைக்கு மத்தியில் கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சை வெற்றிகரமான முறையில் நடத்தப்பட்டதாக பரீட்சைகள் திணைக்களம்தெரிவித்துள்ளது.

ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி ஆரம்பமான 2020 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை நேற்றுடன் நிறைவடைந்தது.

நாடளாவிய ரீதியில் 2 ஆயிரத்து 648 பரீட்சை மத்திய நிலை யங்களில் பரீட்சை இடம் பெற்றன.

இந்த நிலையில் கொரோனா வைரஸ் அச்சநிலைமை காணப்பட்ட போதிலும் கல்விப்பொதுத் தராதர உயர்தர பரீட்சை வெற்றிகரமான முறையில் நடத்தப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார். (நி)

# கடல் புறா

## புதிதாக வந்தவன்

தவிர, இருவரும் கலிங்கத்தின் மன்னர்களான அனந்தவர்மன், பீமன் இவர் பகைக்கு இலக்காகி ஆப த்தில் சிக்கியவர்கள் ஆபத்து நட்பின் நெருக்கத்தை ஏற்படுத்துகிறது இயல் பல்லவா?" என விளக்கினான்.

இந்த விளக்கத்திலும் சரி, அத ற்கு முன்பு அமீருடன் நடந்த சம்பா ஷணையிலும் சரி, அநபாயன் தன்னை மிகுந்த மரியாதையுடன், 'கருணாகரர்' என்றும், 'இளைய பல்லவர்' என்றும், 'இணையற்ற படைத்தலைவர்' என்றும் அழைத்த தைக் கவனித்து அதை ரசிக்க முடியாத இளையபல்லவன், மீண் டும் சம்பாஷணை தன்னையும் காஞ்சனா தேவியையும் சுற்ற முயல்வதைக் கண்டு அதைத் தடுக்கும் நோக்கத்துடன் "அநபாயர் இந்த அடிமைக்கு அளவுக்கு மீறிய மரியாதையைக் காட்டுவது அழக ல்ல" என்று சற்றுக் கோபத்துடன் சொன்னான்.

அந்தக் கோபத்தின் காரணம் அநபாயனுக்குப் புரிந்திருந்ததால் அவன் சற்று இரைந்தே நகைத்து விட்டுச் சொன்னான், "கருணாகரா! உன்னை மரியாதையாக அழைக்க வேண்டுமென்ற காரணத்தால் அந்த மரியாதையைக் காட்டவில்லை தான். புதிதாக அமீரிடம் அறிமுப்ப டுத்தி வைக்க வேண்டிய அவசியம் நேர்ந்தால் உன் குலப் பெயர், பதவி முதலியவற்றைக் குறிப்பிட வேண்டி யதாயிற்று" என்று.

இதற்கு ஏதோ பதில் சொல்ல வாயெடுத்த கருணாகர பல்லவனைத் தன் கையை உயர்த்தி மீண்டும் தடை செய்த அநபாயன், "இப்பொ ழுது நீங்களிருவரும் அறிமுகமாகி விட்டால் என் மனப்பளு பெரிதும் இறங்கிவிட்டது. நம்மை அமீர் கண்டிப்பாகத் தமிழகம் அனுப்பிவிடு வான்.


அமீரின் தூய தமிழைக் கண்டு நீ வியந்ததைப் புரிந்து கொண்டேன் கருணாகரா! ஆனால் அமீரை நன்கு அறிந்தவர்களுக்கு அதில் வியப்பு ஏதுமிருக்காது. அமீர் ஒரு விந்தை மனிதன். அவனுக்குப் பல மொழிகள் தெரியும். சீனமொழி தெரியும். சொர்ண பூமியையும் அதை அடுத்த தீவுகளிலும் வழங் கும் மொழிகள் பலவும் தெரியும்.

பாதி வடமொழி பாதி தென்மொ ழிகள் கலந்த கலிங்கத்தின் புது மொழியும் தெரியும். அரபு மொழி தாய்மொழி. ஆனால் யவனர் மொழி யைத் திறமையுடன் பேசுவான். ஏற்கனவே சொன்னேன் உனக்கு, அரபு நாட்டிலிருந்து சீனா வரை யிலுள்ள துறைமுகங்கள் அவனு க்குத் தெரியும் என்று.

துறைமுகங்கள் மட்டுமல்ல, ஆங்காங்குள்ள மக்களின் மொழி களும் தெரியும். மொழிகள் மட்டு மல்ல, ஒவ்வொரு துறைமுகத்தி லும் இரண்டொரு அந்தரங்க நண்பர் களுமிருக்கிறார்கள். இந்தப் பாளூர்ப்

43

காலத்தின் பதிவு



சாண்டில்யன்

பெருந்துறையில் இவன் கையாட்கள் முக்கியமான பல இடங்களில் பரவிக் கிடக்கிறார்கள். ஆகவே இவன் தாய் மையாகத் தமிழ் பேசுவதைப் பற்றி வியப்படையாதே. அதுமட்டுமல்ல, அரும்பெரும் காரியங்களை இவன் சாதித்தாலும் வியப்படையாதே மற்ற வர்களுக்கு அசாதாரணமானது அமீருக்குச் சர்வசாதாரணம்" என்று கூறியதன்றி அமீரின் முதுகில் மீண் டும் செல்லமாகத் தட்டிக் கொடுத் தான்.

அநபாயன் வார்த்தைகள் கரு ணாகர பல்லவனுபக்கும் காஞ்சனா தேவிக்கும் மென்மேலும் ஆச்சரியத் தையே அளித்தன. அரபு நாட்டான் ஒருவனிடம் அநபாய சோழன் கொண்டுள்ள நம்பிக்கையைக் கண்டு பெரிதும் வியப்பெய்திய அவ்விருவரும் ஒருவரையொருவர் சில விநாடிகள் பார்த்துக்கொண்டனர்.

ஆனால் அமீரின் கண்கள் அத ற்குப் பிறகு யாரையும் பார்க்கும் சக் தியை இழந்தன. அநபாயன் புக ழ்ச்சிச் சொற்கள் அவனுக்குப் பெரும் சங்கடத்தையும் குழப்பத்தையும் அளித்திருந்தன.

ஒரே ஒரு முறை மட்டும் கண் களை உயரத் தூக்கி அநபாயனைப் பார்த்துவிட்டு மீண்டும் நிலத்தைச் சில விநாடிகள் கவனித்த அமீர், அந் தச் சங்கடத்தைப் போக்கிக் கொள் ளவோ என்னவோ துரிதமாகச் செயலில் இறங்கி, "கருணாகர பல்லவரே! தேவி! நான் முதலில் காட்டியபடி போர்வையை நன்றாக இழுத்துப் போர்த்திக் கொண்டு என் பின்னால் முதுகைக் கூனிப் பாதி ஓட்டமும் நடையுமாக வாருங்கள்" என்று கூறிப் புறப்பட ஆயத்தமா னான்.

அமீர் சொன்னபடி எதற்காகக் கூனிக் குறுகி ஓட வேண்டுமென்று புரியாததால் அதை மட்டும் கேட்க முற்பட்ட இளையபல்லவன், "ஏன் அப்படி ஓட வேண்டும்?" என்று வினவினான்.

"அரபு நாட்டு வர்த்தகர்களின் அடி மைகள் ஓடும் முறை அது. நான் முன்னால் செல்ல நீங்கள் கம்பளம் மூடி ஓடி வந்தால் என் அடிமைக ளில் மூவர் என்னைப் பின் தொடரு வதாக இந்த நகர மக்களும் கலிங்க வீரர்களும் நினைப்பார்கள். தோப்பு முகப்பைத் தாண்டியதும் நீங்கள் அந்த முறையைப் பின்தொடர்ந்தால் போதும்.

இப்பொழுது சாதாரணமாகவே செல்லலாம்" என்று அமீர் விளக்கி விட்டுக் குடிசைக் கதவைத் திறந்து கொண்டு அவர்களை உடன் வர சைகை செய்து வெளியே சென்றான். அவன் கூறியபடியே அநபாயன், கருணாகரன், காஞ்சனாதேவி மூவ ரும் தலையிலிருந்து கால்வரை முக்காடிட்ட கம்பளங்களுடன் குடி சையை விட்டு வெளியே வந்து அமீரைப்பின்பற்றிச் சென்றார்கள்.

இரவு நன்றாக ஏறிவிட்டதால், தோப்பில் பயங்கர இருள் சூழ்ந்து கொண்டது. அந்த இருளை இன் னும் அதிகப் பயங்கரமாக அடிக்கச் சற்று தூரத்தே இருந்த கோதாவ ரியின் பிரவாகமும் கடலும் சேரும் இடம் பெரும் இரைச்சலைக் கிளப்பி விட்டுக் கொண்டிருந்தது.

நல்ல ஸ்வரத்துடன் கூவும் பட்சிகள் அந்தத் தோப்பிலிருந்தும், அவை அதிகமாகச் சப்திக்காமல் ஏதோ ஓரிரு ஆந்தைகள் மட்டும் அலறியது பயங்கரத்தை உச்சிக்குக் கொண்டு போயிருந்தது. அந்த இரு ட்டையும் பயங்கரத்தையும் சிறிதும் லட்சியம் செய்யாமல் அமீர் சர்வ சகஜமாக அந்த அடர்ந்த தோப்பில் நடந்து சென்றான்.

அசையக்கூட முடியாத பிர மாண்டமான சரீரத்தைத் தாங்கிய அமீர் நடந்த வேகம் இளைய பல்லவனைப் பெரும் ஆச்சரியத்தில் அமிழ்த்தியது. அவ்வப்பொழுது பின் வருபவர்களை அமீர் பார்வை யிட்டபோது அத்தனை இருட்டிலும் காட்டுப் பூனைகளுக்குள் தந்திர நடையும் திருப்பமும் அமீரின் கால்களிலிருந்ததைக் கண்டு, அநபாயர் நட்புக் கொண்டிருப்பது சாதாரண மனிதனையல்ல' என்று தனக்குள்ளே சொல்லிக்கொண் டான்.

அமீர் வழிகாட்டி முன்செல்ல அவனுக்குப் பின்னால் அநபாயன் செல்ல அநபாயனுக்குப் பின்னால் இளைய பல்லவனும் காஞ்சனா தேவியும் அக்கம் பக்கத்தில் நடந் தார்கள். அமீரின் நடை வேகம் அதிகமாயிருந்ததால் சில சமயங் களில் காஞ்சனாதேவி இஷ்ட விரோ தமாக அரை ஓட்டமும் அரை நடையுமாகவே செல்ல வேண்டிய யிருந்தது.

அப்படி மற்றவர்களைப் பிடிக்கச் சற்று துரித நடையைக் காட்டிய போதெல்லாம் அவள் அழகிய சரீரம் பக்கத்தே நடந்து இளையபல்லவன் உடலுடன் மோதியது அக்கம் பக்கத் திலிருப்பவர்களே சரியாகத் தெரி யாத அந்த இருட்டில் முன்னே செல்பவர்கள் பின்னே வருபவர் களைப் பார்க்க முடியாதென்ற தைரி யத்தில் காஞ்சனா தேவியின் இடது கையும் கருணாகர பல்லவனின் வலது கரமும் அடிக்கடி ஒன்றுபட்டு ஒன்றுபட்டுப் பிரிந்து கொண்டி ருந்தது.

அந்த அசாதாரண இருட்டு, அவர்கள் இருந்த அபாய நிலை, இந்த இரண்டையும் லவலேசமும் நினைத்துப் பார்க்காமல் ஏதேதோ எண்ணங்களில் உள்ளங்களை அலையவிட்டுக் கொண்ட அந்த இருவரையும் திரும்பிப் பாராமலே தீவிரமாகத் தோப்பில் நடந்து சென்றான் அமீர்.

தோப்பின் பெருமரங்கள் இலை களை நிரம்ப உதிர்த்திருந்ததால் பாதை மெத்த மெத்தென்றே இருந் ததென்றாலும் இரண்டொரு சுள் ளிகள் கால்கள் இடறி வருத்தவே செய்தன. அப்படிப் பாதங்களில் சுள்ளிகள் தட்டுப்பட்ட சமயங்களில் காஞ்சனாதேவியைச் சட்டென்று தன்னை நோக்கி இழுத்துக் கொண்டு நடந்தான் இளையபல்லவன்.

(தொடரும்...)

# ஒரு மீற்றருக்கு மேல் வைரஸ் பயணிக்காது என்று கூறமுடியாது- வைத்தியர் ஹரித

(கொழும்பு)

**ஒரு மீற்றருக்கு மேல் வைரஸ் பயணிக்காது என்று கூற முடியாது. எனவே ஒரு மீற்றர் இடைவெளி என்பதை விட முடிந்தளவு ஒரு மீற்றர் அல்லது அதனை விட கூடிய இடைவெளியைப் பேணுமாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே அறிவுறுத்தியுள்ளார்.**

அரச மருத்துவ அதிகாரிகள் சங்க அலுவலகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தொற்றாளர்களின் எண்ணிக்கையைப் போன்றே மரணங்களின் எண்ணிக்கையும் சடுதியாக அதிகரித்த போக்கை காண்பிக்கிறது. இவ்வாறான நிலையில் அவதானம் மிக்க பகுதிகளை அடையாளப்படுத்தாவிட்டால் பாரதூரமான விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

357 மருத்துவ சுகாதார பிரிவுகளில் 60 இற்கும் குறைவான பகுதிகளிலேயே அதிக கூடிய அவதானமுடைய பகுதிகள் காணப்படுகின்றன. எனவே கட்டுப்படுத்தக் கூடிய மட்டத்திலேயே நிலைமை காணப்படுகிறது. அண்மையில் வீடுகளிலேயே இறந்த சிலருக்கு முதலாவது பரிசோதனையில் தொற்று ஏற்படவில்லை என்ற முடிவும் உயிரிழந்ததன் பின்னர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்ற முடிவும் கிடைத்துள்ளது.

இவ்வாறான நிலைமை தொடருமானால் தற்போது தொற்றாளர்களைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் நாம் மரணங்களைப் பற்றி பேச வேண்டியேற்படும். இவ்வாறு உயிரிழந்தவர்களுக்கு சமூகத்திலிருந்து வைரஸ் தொற்று ஏற்படவில்லை. மாறாக வீட்டிற்குள் வைரஸ் கொண்டு செல்லப்பட்டுள்ளது. சிறைச்சாலைகள், பொருளாதார மத்திய நிலையங்கள், ஆடை தொழிற்சாலை என்பவற்றில் வைரஸ் பரவுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவுள்ளன.

பி.சி.ஆர். பரிசோதனைகளின் அளவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. எனினும் அது மேலும் அதிகரிக்கப்பட வேண்டும். பி.சி.ஆர். பரிசோதனையை விட செலவு குறைந்த முறையில் துரிதமாக முன்னெடுக்கப்படும் பரிசோதனைக்கு இலங்கை மாற வேண்டும். அத்தோடு மீண்டும் மீண்டும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஒரு மீற்றருக்கு மேல் வைரஸ் பயணிக்காது என்று கூற முடியாது. எனவே ஒரு மீற்றர் இடைவெளி என்பதை விட முடிந்தளவு ஒரு மீற்றர் அல்லது அதனை விட கூடிய இடைவெளியைப் பேணுமாறு அறிவுறுத்துகின்றோம் என்றார். (நி)

# பணப் பரிமாற்றங்களின் போது மிகவும் அவதானமாயிருங்கள்

## எச்சரிக்கிறார் அஜித் ரோஹண

(கொழும்பு)



அத்தியாவசிய பொருட்கொள்வனவு நடவடிக்கைகளின் போது பொது மக்கள் சுகாதார நியமங்களை முறையாக கடைப்பிடிக்க வேண்டுமென பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார்.

சுகாதார நடைமுறைகள் குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களில் தேவையான அத்தியாவசியப் பொருட்களை விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கென வீடுகளுக்கு, வீதிகளுக்கு, பிரதான இடங்களில் முன்னெடுக்கப்படும் விநியோக நடவடிக்கையின் போது முறையான சுகாதார நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும்.

மேலும் குழுக்களாக இந்த இடங்களில் செயற்பட வேண்டாம். அத்துடன் தனியான ஒருவர் மாத்திரம் பொருட் கொள்வனவில் ஈடுபடுவதுடன் முகக்கவசம் மற்றும் சமூக இடைவெளியை முறையாக பின்பற்றுங்கள். மேலும் பணப்பரிமாற்றம் செய்யும் போது மிகவும் அவதானமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுங்கள்” என பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

# கட்டுப்பாட்டு விலையில் அரிசியைப் பெற முடியவில்லை

## வர்த்தகர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அறிவிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையில் அரிசியைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என வர்த்தகர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

அரிசிக்கான கட்டுப்பாடு விலை நிர்ணயிக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தல் அண்மையில் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த கட்டுப்பாட்டு விலையில் அரிசியைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை என வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

வெளியிடப்பட்ட வர்த்தமானிக்கு அமைவாக ஒரு கிலோ நாடு 92 ரூபாய் எனவும், ஒரு கிலோ சம்பா 94 ரூபாய் எனவும் அரிசிக்கான கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இன்று ஒரு தகவல்

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மன்னர் வீட்டுத் திருமணம்

பிரிட்டிஸ் ஆட்சி நடந்து கொண்டிருந்த காலம். 1920களின் கடைசி. அப்பொழுது நடந்த ஒரு உண்மை நிகழ்ச்சி இது. ஒரு கல்யாண மாப்பிள்ளை ரயிலில் வந்து இறங்கப் போகின்றார். அவரை வரவேற்க ஒரு ராஜ குடும்பமே வந்து காத்துக் கொண்டிருக்கின்றது.

மங்களூரிலேயிருந்து வந்து இறங்குகின்ற அந்த மாப்பிள்ளை யார் தெரியுமா? ஒரு நாய். உண்மை தான். அந்த நாய்க்குத் தான் கல்யாணம். சுதேசி சமஸ்தானத்து மன்னர்களிலே ஒருத்தர்...ஜுனாகட் மகாராஜா அவருடைய வளர்ப்பு நாய் ரோஷனாரா. அதற்குக் கல்யாணம் செய்து வைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். மாப்பிள்ளை தேடினார். மங்களூர் மகாராஜாவோடு வளர்ப்பு நாய் ஒன்று இருந்தது. பேரு பாபி.

இது இரண்டுக்கும் கல்யாணம் நடத்த முடிவு செய்தார். திருமணத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளையும் செய்யுங்கள் என்று உத்தரவு போட்டார். ஆயிரக்கணக்கான அழைப்பிதழ்கள், பல சமஸ்தான மன்னர்கள், ஜமீன்தார்கள், பிரிட்டிஷ் அதிகாரிகள், பெரிய பணக்காரர்கள்...இப்படி நிறையப் பேருக்கு அழைப்பிதழ்கள் அனுப்பி வைத்தார்.

பத்திரிகையை பார்த்தவர்கள் எல்லாம் திகைத்துப் போய்விட்டார்கள். இருந்தாலும் என்ன செய்வது? ராஜாவே அழைக்கின்றார்...போகாமல் இருக்க முடியுமா? அந்த சமயத்திலே நாட்டின் ஆளுநர் ஜெனரலா இருந்தவர் இர்வின் பிரபு. அவருக்கு ஒரு பத்திரிகை போயிருக்கின்றது. வாங்கிப் பார்த்ததும் அவருக்குப் பயங்கர எரிச்சல்.

உடனே குப்பைத் தொட்டியிலே போட்டாராம். மாட்சிமை தங்கிய பிரிட்டன் சக்கர வர்த்தியின் பிரதிநிதியான தன்னை கேவலம் ஒரு நாயின் திருமணத்திற்காக அழைப்பதா? என்று அவருக்கு ஆத்திரம்.

இருந்தாலும் கல்யாணம் பிரமாதமாக நடந்ததாம்.

கல்யாணத்தன்று பெண்ணுக்கு ஸ்பெஷல் குளியல். தண்ணீருக்கு பதிலாக வாசனைத் திரவியங்கள்...பன்னீர் குளித்ததுக்குப் பின்பு அலங்காரம்...வைர மாலை... முத்து மாலை...ஏகப்பட்ட அலங்காரம். மாப்பிள்ளையை அழைக்க ரயில் நிலையத்திலே ராஜகுடும்பமே காத்துக் கொண்டிருக்கின்றது.

அவர்களோடு வளர்ப்பு நாய்கள் 250. அத்தனை நாய்களுக்கும் பட்டுத்துணி போர்த்தியிருக்கு... முத்து வடங்கள் அணிவித்திருக்கின்றார்கள். ராஜ நாய்கள்..அதுகளையும் வீதியிலே நடக்க விடவில்லையாம். அவைகளை சுமந்து கொண்டு போக அலங்கரிக்கப்பட்ட யானைகள் காத்துக் கொண்டிருக்கின்றன.

மாப்பிள்ளைக்கு வரவேற்கு எப்படித் தெரியுமா? அது நடந்து வருகின்ற பாதை முழுவதும் இரத்தினக் கம்பளம் விரித்திருக்கின்றது. இரண்டு பக்கமும் இராஜாங்க அதிகாரிகள் கைகட்டி நிற்கிறார்கள். அரசுப் படைவீரர்கள் அணிவகுப்பு மரியாதை செலுத்துகின்றார்கள். அந்த நாய் இராஜமரியாதையோடு நடந்து வருகின்றது நகையெல்லாம் போட்டுக் கொண்டு.

திருமண மண்டபத்திற்கு வந்து சேருகின்றது. அங்கே கல்யாணம் அமோகமாக நடக்கின்றது.

இந்த திருமணத்தை முன்னிட்டு அந்த ஜீனா கட் சமஸ்தானத்திற்கு மூன்று நாள் விடுமுறை.

கல்யாணத்திற்கு வந்திருந்தவர்களுக்கெல்லாம் ஏக தடபுடலாக விருந்து. நாட்டியம் எல்லாம் பிரமாதமாக நடந்ததாம். இந்தக் கல்யாணத்திலே கலந்து கொள்ள வந்திருந்த மற்ற சமஸ்தானத்து மன்னர்கள்–திவான்கள்– அரச குடும்பத்தினர் இப்படி அவர்கள் 700 பேர்.

அவர்கள் வந்து போவதற்காக விசேட ரயில்கள் எல்லாம் விட்டிருக்கின்றார்கள். கல்யாணம் முடிந்ததும் அந்த நாய்த் தம்பதியரோடு பெரிய பெரிய மன்னர்கள் எல்லாம் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டார்களாம். ஏர்கண்டிஷன் அறையில் அந்தத் தம்பதியர் கொஞ்சக்காலம் வாழ்ந்திருக்கின்றார்கள். கொஞ்ச நாளிலே மாப்பிள்ளைக்கு மரியாதை குறைய ஆரம்பித்துவிட்டது. வெளியிலே துரத்தி விட்டார்களாம்.

அந்தப் பெண் நாய் மட்டும் இராஜ போகங்களை அனுபவித்து வந்த தாம். இந்தக் கல்யாணத்தைப் பார்த்துவிட்டு தொடர்ந்து ஏனைய சமஸ்தான மன்னர்களும் நாய்த் திருமணங்கள் நடத்த ஆரம்பித்து விட்டார்களாம்.

அது இருக்கட்டும்...இப்பொழுது எங்கள் கதைக்கு வருவோம். ஒரு ராஜாவுக்கு நீண்ட நாள் கழித்து ஒரு குழந்தை பிறந்ததாம். அரண்மனை ஜோசியரைக் கூப்பிட்டார் ராஜா.

ஜோசியரே என் மகன் வருங்காலத்திலே சிறந்த வாள் வீரனாக வர வேண்டும் என்று ஆசைப்படுகின்றேன். வருவானா பார்த்துச் சொல்லுங்கள் என்றார்.

ஜோசியர் சொன்னார்... மன்னா உங்கள் பிள்ளை வாள் வீரனாக வருவது கஷ்டம். ஆனால் அவரும் உங்களை மாதிரியே நாய்க் குட்டிகள் மீது பிரியமாக இருப்பார். அதுகளுக்குக் கல்யாணமும் செய்து வைப்பார் என்றார். அது எப்படி கண்டு பிடித்தீர்கள்? என்று கேட்டார் ராஜா.

அரசே... உங்கள் பிள்ளைக்கு வாள் மேலே உள்ள பிரியத்தைக் காட்டிலும் நாய் மேலே உள்ள பிரியம் அதிகம் என்கின்றதுக்கான அறிகுறி இப்பொழுது தெரிகின்றது. நன்றாகக் கவனித்துப் பாருங்கள். அவர் வாள்... வாள்... என்று கத்தவில்லை. வள் வள் என்று கத்துகின்றார் என்றார் அரண்மனை ஜோசியர்.

# உலக கவனத்தை ஈர்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்

**12**

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**ஜனாதிபதி றொனால்ட் றீகன் படுகொலை முயற்சி**



றொனால்ட் றீகன்

வோஷிங்டனிலுள்ள ஹோட்டலொன்றுக்கு வெளியே 1981 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் அமெரிக்காவின் ஜனாதிபதி றொனால்ட் றீகனும் வேறு மூவரும் காயமடைந்திருந்தனர். நடிகையான ஜோடி பொஸ்டரை கவரச் செய்வதற்காகவே ஜோன் ஹிங்லி என்ற மனநலம் பாதிக்கப்பட்ட இளைஞர் றீகனை சுட்டிருந்தார். றீகன், ஜனாதிபதியாகப் பதவியேற்று இரண்டு வாரங்களில் இடம்பெற்ற குறித்த சம்பவம் உலகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது.

எனினும், நுரையீரலில் சுடப்பட்டிருந்த றீகன், அறுவைச் சிகிச்சை மூலம் குணமடைந்து 8 ஆண்டுகள் ஜனாதிபதியாக பணியாற்றினார். தலையில் சுடப்பட்ட றீகனின் ஊடகச் செயலாளர் ஜேம்ஸ் பிராடி, மூளைப் பாதிப்பை எதிர்நோக்கியதுடன், சக்கரக் கதிரையிலேயே தனது வாழ்நாளை கழித்திருந்தார். இது தவிர இரண்டு அதிகாரிகள் சிறிய காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

இவற்றைவிட 1835 இல் ஜனாதிபதி ஆன்ட்ரூ ஜாக்ஸன் மீதும், 1912 இல் ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட் மீதும், 1933 இல் ஜனாதிபதி பிராங்கிளின் டி ரூஸ்வெல்ட் மீதும் 1950 இல் ஜனாதிபதி ஹாரி எஸ்ட்ரூமேன் மீதும், 1993 இல் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மீதும் 2001 மற்றும் 2005 இல் ஜனாதிபதி ஜோர்ஜ்.டபிள்யூ புஷ் மீதும் கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

**அமெரிக்காவின் ஜனாதிபதி பதவி பற்றிய சில விடயங்கள்**

❖ நாட்டுத்துரோகம், இலஞ்சஊழல், அல்லது மற்ற பெருங்குற்றங்களும் சிறுகுற்றங்களும் செய்தார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, அது உறுதியாக்கப்பட்டால் அமெரிக்காவின் ஜனாதிபதி, துணைத்தலைவர், மற்றக் குடியாட்சி அதிகாரிகள் அப்பதவியிலிருந்து விலக்கப்படுவர். (அரசியல் அமைப்பின் இரண்டாம் பகுதியின் நான்காம் பிரிவு).

**நாட்டுத்துரோகம், இலஞ்சஊழல், அல்லது மற்ற பெருங் குற்றங்களும் சிறுகுற்றங்களும் செய்தார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு, அது உறுதியாக்கப்பட்டால், அமெரிக்காவின் ஜனாதிபதி, துணைத்தலைவர், மற்ற குடியாட்சி அதிகாரிகள் அப்பதவியிலிருந்து விலக்கப்படுவர். அமெரிக்க ஜனாதிபதியும் துணை ஜனாதிபதியும் ஒரே மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடாது.**

❖ பழைய அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனை நீதிமன்றத்தில் பொய்யுரைத்தார் என்று அப்போதிருந்த பிரதிநிதிகள் சபை குற்றஞ்சாட்டி உறுதி செய்தது (impeached). ஆயினும், அதை செனட் சபையும் உறுதி செய்யாததால், பில்கிளின்டன் பதவிநீக்கம் செய்யப்படவில்லை.

**அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனை நீதிமன்றத்தில் பொய்யுரைத்தார் என்று அப்போதிருந்த பிரதிநிதிகள் சபை குற்றஞ் சாட்டி உறுதி செய்தது (impeached). ஆயினும், அதை செனட் சபையும் உறுதி செய்யாததால், பில் கிளின்டன் பதவிநீக்கம் செய்யப்படவில்லை.**

❖ அமெரிக்க ஜனாதிபதியும் துணை ஜனாதிபதியும் ஒரே மாநிலத்தை/ மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கக் கூடாது. அதாவது இதன்மூலம் ஒரு மாநிலத்திடமே அமெரிக்காவின் செயலாற்றும் உரிமை குவிந்து விடக்கூடாது என்று முடிவெடுக்கப்பட்டது. (அரசியல் அமைப்பின் பன்னிரண்டாவது திருத்தம்).

**அமெரிக்க ஜனாதிபதியின் பதவிக்காலம் துவங்க முன்னர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் இறந்து விட்டால், துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அமெரிக்க ஜனாதிபதியாவார்.**

❖ அமெரிக்க ஜனாதிபதியின் பதவிக்காலம் துவங்கு முன்னர் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் இறந்து விட்டால், துணைத்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அமெரிக்க ஜனாதிபதியாவார். (அரசியல் அமைப்பின் இருபதாம் திருத்தம்). அதாவது, நவம்பர் இரண்டாம் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதித் தேர்தல் முடிந்து முடிவு தெரிந்தாலும் தேர்தல் முடிந்த பின்னரும் ஜனவரி இருபதாம் திகதி ஜனாதிபதி பதவி ஏற்பார். அதற்குள் அவர் இறந்துவிட்டால் என்ன செய்வது? அதைத்தான் அரசியல் அமைப்பின் இருபதாம் திருத்தம் சொல்கிறது.

❖ அமெரிக்க ஜனாதிபதியாக இருமுறையே தேர்ந்தெடுக்கப்படலாம் என்று அரசியல் அமைப்பின் இருபத்திரெண்டாம் திருத்தம் சொல்கிறது. இத்திருத்தம் 1947 இல் கொண்டுவரப்பட்டு, 1951 இல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி எத்தனைமுறை தேர்ந்தெடுக்கப்படலாம் என்பது அரசியல் சாசனத்தில் முதலில் வரையறுக்கப்படாவிட்டாலும் முதல் அமெரிக்க ஜனாதிபதியான ஜோர்ஜ் வாஷிங்டன் முதலானோர் தானாகவே இருமுறைக்குப்பின் போட்டியிடவில்லை. எழுத்திலில்லாத இம்முறை கிட்டத்தட்ட நூற்றைம்பது ஆண்டுகளாக அமெரிக்க ஜனாதிபதிகளால் கடைப்பிடிக்கப்பட்டது.

ஆயினும், அமெரிக்கப் பொருளாதாரத்தில் மிகவும் பின்னடைவு அடைந்த போது அதை மீட்டெடுத்தவர் என்பதாலும் இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் சிறந்தமுறையில் அமெரிக்காவை வழிநடத்திச்சென்று வெற்றிக்கு அடிகோலியவர் என்பதாலும் மூன்றாம் முறை தேர்தலுக்கு நின்ற பிராங்கிளின் ரூஸ்வெல்ட் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் மூன்று முறை அமெரிக்க ஜனாதிபதியாகவிருந்தார். அவர் காலத்திற்குப் பின்னர் ஜனாதிபதி பதவியை இருமுறையோடு கட்டுப் படுத்தும் அரசியல் அமைப்பின் 22வது திருத்தம் நிறைவேற்றப்பட்டது.**

அவர் காலத்திற்குப் பின்னர் மற்ற ஜனாதிபதிகள் கைப்பிடித்த இருமுறை பதவிக்காலமே சிறந்த ஒன்று என்றும், மக்களாட்சி நடந்துவரும் ஒரு நாடு தனிமனிதர் ஒருவரால் பல பத்தாண்டுகள் ஆளப்படக்கூடாது என்பதாலும், ஜனாதிபதி பதவியை இருமுறையோடு கட்டுப்படுத்தும் (அரசியல் அமைப்பின் 22 ஆவது) திருத்தம் நிறைவேற்றப்பட்டது.

❖ அரசியல் அமைப்பின் இருபத்தைந்தாம் திருத்தம் பிரிவு 1: அமெரிக்க ஜனாதிபதி அவரது பதவியிலிருந்து நீக்கப்பட்டாலோ, விலகினாலோ, இறந்தாலோ, துணைத்தலைவர் ஜனாதிபதியாவார். பிரிவு 2: துணைத் தலைவர் பதவி காலியானால்/அவர் நீக்கப்பட்டாலோ, விலகினாலோ, இறந்தாலோ என்று புரிந்துகொள்ளவும்) ஜனாதிபதி ஒரு துணைத் தலைவரை நியமிப்பார். சட்டமன்றத்தின் இருபிரிவுகளும் அதை உறுதி செய்த பின் அவர் பதவியேற்பார்.

அமெரிக்கத் துணைத்தலைவர் செனட் சபையின் தலைவர். அவரை செனட் சபையின் 'பிரசிடென்ட் ப்ரோ டெம்ப்போரே (President Pro Tempore)' என்றழைக்கிறார்கள். பிரதிநிதிகள் சபையின் தலைவர் (சபாநாயகர்) 'ஸ்பீக்கர் ஆஃப் த ஹவுஸ்' என்றழைக்கப்படுகிறார். எனவே துணைத் தலைவருக்கு அடுத்தபடி அதிகாரம் பெற்றவர் சபாநாயகர்தான்.

ஒருவேளை, அமெரிக்க ஜனாதிபதியும் துணைத்தலைவரும் ஒரே சமயத்தில் விபத்துக்குள்ளாகிச் செயலிழந்துவிட்டால், பிரதிநிதிகள் சபையின் தலைவர் (சபாநாயகர்) அமெரிக்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்பார்.

❖ அரசியல் கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளருக்கான போட்டியில் வெற்றி பெறுபவர், தனது உப ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்து கொள்ளலாம். ஆனால், உப ஜனாதிபதி வேட்பாளரும் ஜனாதிபதியாகுவதற்கான சகல தகுதிகளையும் கொண்டிருக்க வேண்டும்.

(தொடரும்...)

**1835 இல் ஜனாதிபதி ஆன்ட்ரூ ஜாக்ஸன் மீதும், 1912 இல் ஜனாதிபதி தியோடர் ரூஸ்வெல்ட் மீதும், 1933 இல் ஜனாதிபதி பிராங்கிளின் டி ரூஸ்வெல்ட் மீதும், 1950 இல் ஜனாதிபதி ஹாரி எஸ் ட்ரூமேன் மீதும், 1975 இல் இருமுறை ஜனாதிபதி ஜெரால்ட் போர்ட் மீதும் 1981 இல் ஜனாதிபதி றொனால்ட் றீகன் மீதும் 1993 இல் ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் மீதும், 2001 மற்றும் 2005 இல் ஜனாதிபதி ஜோர்ஜ். டபிள்யூ புஷ் மீதும் கொலை முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.**

# தனிமைப்படுத்தலை நிறைவு செய்தவர் மயங்கி வீழ்ந்து மரணம்

(புத்தளம்)


புத்தளம் தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த ஒருவர் வீதியோரத்தில் மயங்கி வீழ்ந்து உயிரிழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. புத்தளம், நிந்தனியைச் சேர்ந்த 55 வயதுடைய குடும்பஸ்தரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கெட்டிப்பொலவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் பணி புரிந்து வந்த இவர் அங்கு 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட்டு கடந்த புதன்கிழமை தனிமைப்படுத்தலை நிறைவு செய்து நேற்று முன்தினம் வீட்டிற்கு வருகை தந்ததாக புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் உயிரிழந்த நபரின் இரத்த மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்பட்டு பரிசோதனை முடிவுகள் கிடைத்தவுடன் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என புத்தளம் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். (நி)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



## கொடி மர தத்துவம்

(தொடர்ச்சி)

ஆனால் பெரும்பாலும் கொடி மரத்தில் ஐந்தில் ஒரு பாகம் பூமிக்குள் இருக்கும்படி அமைப்பார்கள். இதன் அடிப்பகுதி அகலமாகவும் சதுரமாகவும் இருக்கும். இதற்கு சமபீடம் என்று பெயர்.

இந்த சதுர பாகம், படைப்பு தொழிலுக்கு உரியவரான பிரம்மாவையும் அதற்கு மேல் உள்ள எண்கோணப்பகுதியான விஷ்ணு பாகம் காத்தல் தொழிலுக்கு உரியவரான விஷ்ணுவையும் அதற்கு மேல் உள்ள நீண்ட ருத்ர பாகம், சம்ஹாரத் தொழிலை செய்யும் சிவபெருமானையும் குறிக்கும்.

அதாவது கொடி மரம் என்பது மும்மூர்த்திகளையும் அவர்கள் மேற்கொள்ளும் மூன்று தொழில்களையும் உணர்த்துகின்ற ஒரு அடையாளமாகத் திகழ்கிறது. இதன் மூலம் கோவிலில் நுழைந்த உடனேயே வாழ்வின் மூன்று முக்கிய அம்சங்கள் நமக்கு உணர்த்தப்பட்டு விடுகின்றன.

கொடி மரம் முழுவதும் பல்வேறு இறை உருவங்களை சிற்பங்களாக வடித்திருப்பார்கள். கொடி மர உச்சியில் மூன்று பட்டைகள் போன்ற ஏர் பலகை இருக்கும். இதனை திருஷ்டிப் பலகை என்றும் சொல்வார்கள். இதில் சிறு சிறு மணிகளை கட்டித் தொங்க விட்டிருப்பார்கள். அந்த கொடி கோவில் உள் நோக்கியபடி இருக்கும்.

சிலகோவில்களில் மூன்று பட்டைக்கு பதில் ஒரே ஒரு பட்டையே இடம்பெற்றிருக்கும். மணி தொங்கவிட்டிருக்க மாட்டார்கள். ஒவ்வொரு ஆலயத்துக்கு ஏற்ப இந்த அமைப்பு காணப்படும். ஒரே பட்டையுடன் இருக்கும் கொடி மர அமைப்பை கருடஸ்தம்பம் என்று சொல்வார்கள். சில ஊர்களில் கல்லில் கூட கொடி மரம் உள்ளது.

இத்தகைய அமைப்புடைய கொடி மரத்தில் திருவிழா நாட்களில் கொடி ஏற்றுவார்கள். ஏன் கொடி ஏற்றுகிறார்கள் தெரியுமா? அதிலும் பல்வேறு தத்துவங்கள் அடங்கி உள்ளன.

பொதுவாக கொடி என்பது ஆட்சி அதிகாரத்தை குறிக்கும். பழங்காலத்தில் ஒரு மன்னன் பக்கத்து நாடு மீது படையெடுத்துச் சென்று அந்நாட்டை பிடித்தால் அங்கு தன் அதிகாரம் வந்து விட்டத்தை குறிக்கும் வகையில் தனது கொடியை பறக்க விடுவான்.

அதேபோன்று தான் திருவிழா நடக்கும் நாட்களில் அந்த ஊர் முழுவதையும் ஆண்டவன் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதை உணர்த்த கோவில்களில் கொடி ஏற்றம் நடத்தப்படுகிறது. இது மக்கள் மன நிலையில் மாற்றம் ஏற்படுத்தவும் விழா சமயத்தில் வெளியாட்களால் நோய் பரவல் ஏற்படுவதையும் தடுக்கிறது.

இதைக் கருத்தில் கொண்டே கொடி ஏற்றுவதற்கு முன்பு கல்பம், அனுகல்பம் என்ற இருவகை சடங்குகளை செய்வார்கள். கொடி ஏற்றுவதற்கு முன்பு தேவதைகளை ஆவாகனம் செய்வது கல்பம் எனப்படும். கொடி ஏற்றிய பிறகு தேவதைகளை ஆவாகனம் செய்வது அனுகல்பம் எனப்படும்.


இந்தச் சடங்குகள் மூலம் கோவில் கொடி மரங்கள் சக்திமிக்கவைகளாக மாறுகின்றன. இத்தகைய மரத்தில் கொடி ஏற்றுவது இறைவனின் படைப்புத் தொழிலைக் குறிப்பதாக சொல்கிறார்கள். எப்படித் தெரியுமா?

கொடி மரம் என்பது இறைவன் கொடிக் கயிறு - சக்தி, கொடித்துணி - ஆத்மா, கொடி ஏற்ற பயன்படுத்தும் தர்ப்பைக் கயிறு - பாசம் ஆகியவற்றை குறிக்கும். கோவிலில் கொடி ஏற்றும் போது குருக்கள் வேதமந்திரங்கள் முழங்க, தர்ப்பைக் கயிற்றுடன் வெள்ளைத் துணியை வளைத்து வளைத்து ஏற்றுவார்கள். இது உயிர்களையும் அறத்தையும் உயர்ந்த நிலைக்கு உயர்த்துவதை உணர்த்துகிறது.

இறைவனிடம் பாசக்கட்டு அறுமாறு நம்மனதை பலியிட வேண்டும் என்பதற்காக ஆன்மாவை பாசக்கயிறு சுற்றியுள்ளதை காட்டும் வகையில் கொடிமரத்தில் கயிறு சுற்றப்பட்டிருக்கும். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## மட்டக்களப்பிலும் ஒருவருக்கு தொற்று உறுதி




(கல்முனை)

மட்டக்களப்பு நகரில் ஒருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர். மட்டக்களப்பு தாண்டவன்வெளி பகுதியில் உள்ள ஒருவருக்கே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர் செங்கலடியில் உள்ள வர்த்தக நிலையத்தில் கடமையாற்றுவதாகவும் அங்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையிலேயே இவர் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

பொதுமக்கள் தேவையற்ற வகையில் வெளியில் நடமாடுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (நி)

## 43 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்தனர்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேக்தின் பேரில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த 43 பேர் நேற்று வெள்ளிக்கிழமை தனிமைப்படுத்தல் காலத்தினை நிறைவு செய்து வீடுகளுக்கு திரும்பியுள்ளனர்.

தனியார் உணவகங்களில் தனிமைப்படுத்தப்பட்டவர்களே இவ்வாறு தனிமைப்படுத்தல் காலத்தினை நிறைவு செய்து வீடு திரும்பியுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் தனிமைப்படுத்தல் காலத்தினை நிறைவு செய்து வீடு திரும்பியவர்களின் மொத்த எண்ணிக்கை 63 ஆயிரத்து 644 ஆக அதிகரித்துள்ளது. இலங்கையில் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 570 ஆக அதிகரித்துள்ளது. மேலும் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோரின் எண்ணிக்கை ஆறாயிரத்து 623 ஆக காணப்படுகின்றது.

இந்நிலையில் இன்னும் ஐயாயிரத்து 918 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றினால் இதுவரை 29 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 120 | 100 |
| உருளைக்கிழங்கு | 140 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 90 |
| தக்காளி | 100 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 70 | 100 |
| கோவா | 60 | 80 | 100 |
| கரட் | 100 | 170 | 180 |
| பூசணி | 50 | 40 | 50 |
| புடோல் | 200 | 80 | 70 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 250 | 220 | 200-240-280 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 140-160 |
| பாகற்காய் | 180 | 240 | 200 |
| வெண்டிக்காய் | 60 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 80 | 90 | 100 |
| பயற்றங்காய் | 40 | 140 | 90 |
| லீக்ஸ் | 60 | 100 | 90 |
| பீற்றூட் | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 200 | 200 | 200 |
| முருங்கைக்காய் | 150 | 140 | 160 |
| போஞ்சி | 120 | 170 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 100 | 100 |
| கீரை - 1 பிடி | 40 | 30 | 30-40 |
| தேசிக்காய் | 120 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 75 |
| இராசவள்ளி | 250 | 300 | — |
| வெங்காயப்பூ | 100 | 160 | — |
| முள்ளங்கி | 80 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 |
| வல்லாரை | 15 | 50 | 20 |
| ஈரப்பலா | 60 | 80 | — |



# சிறுவர் அரங்கம்

## குரு சொன்ன அறிவுரை



ஒரு நாட்டின் மன்னர் தனது மகனை குருகுலத்திற்கு கல்வி கற்க அனுப்பி வைத்தார். அவனும் குரு குலத்தில் மன்னர் மகன் என்ற அகந்தையை விடுத்து அனைத்து சீடர்களுடனும் ஒற்றுமையாக பழகி வந்தான்.

குரு சொல்லும் அனைத்துக் கட்டளைகளையும் மிகுந்த பணிவுடன் செய்து வந்தான். இப்படியே குரு குலத்தில் பல ஆண்டுகளாக கல்வி பயின்று வந்தான்.

ஒருநாள் கல்வி பயின்று முடித்து தன்னுடைய அரண்மனைக்கு செல்ல வேண்டிய நாள் வந்தது.

மன்னரின் மகன் குரு குலத்தில் இருந்து விடை பெற்று தன் நாட்டிற்கு செல்லும் முன் குருவிடம் ஆசீர்வாதம் வாங்கச் சென்றான்.

அப்போது மன்னரின் மகனைப் பார்த்து, குரு, நீ முறம் மாதிரி இரு. சல்லடை மாதிரி இருக்காதே என்று அறிவுரை கூறினார். மன்னனின் மகனும், சரி சுவாமி நான் முறமாகவே இருக்கிறேன் என்றான்.

இதன் பொருள் என்னவென்று மன்னனுக்கு புரியவில்லை. தன் மகனிடம் கேட்டார் மன்னர். அதற்கு அவருடைய மகன், சல்லடை, நல்ல விடயங்களை எல்லாம் கீழே தள்ளிவிட்டு, தேவையில்லாத கழிவுகளையும், கல்லையும் மண்ணையும் தான் வைத்துக் கொள்ளும்.

ஆனால் முறமோ, பதர், கல், மண் போன்றவற்றைக் கீழே தள்ளிவிட்டு நல்ல விடயங்களை மட்டும் தக்க வைத்துக் கொள்ளும். இது தான் குரு சொன்ன அறிவுரை என்று கூறினான். குரு கூறிய அறிவுரைப் படியே மன்னரின் மகன் கடைப்பிடிக்கலானான்.

**நீதி : நல்ல விடயங்களை மட்டும் மனதில் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## ஆசான் அரிஸ்ரோட்டில்

17

இங்குள்ள ஒரு தோட்டத்தில் அழகிய வீடு ஒன்றைக் கட்டி அதற்கு அகாடமி என்று பெயர் வைத்திருந்தார் கிரேக்க தத்துவஞானி பிளேட்டோ. அகாடமியா என்றால் கிரேக்க மொழியில் தோட்டம் என்று பெயர்.

அந்த அகாடமியின் பிரதானமான பணி மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பது மாத்திரமல்ல கலை, இலக்கியம், பண்பாடுகளைப் பற்றிய புரிதலை ஏற்படுத்துவது, வளர்ப்பது எல்லாமே.

இதன் காரணமாகவே பிற்காலத்தில் கல்வியோடு சேர்த்து கலைகளை, பண்பாட்டைக் கற்றுத் தரும் இடங்களுக்கு அகாடமி என்றே பெயர் வைக்கும் பாணி தொடங்கியது.

கிரேக்க தேசத்தில் முக்கியமான மாகாணங்களுள் ஒன்று திரேஸ். இங்குள்ள ஸ்டாகிரா



ஸ்டாகிரா (Stagira)

(Stagira) என்கிற ஊரில் பிறந்தவர் அரிஸ்ரோட்டில்.

பதினெட்டு வயது இருக்கும் போது பிளேட்டோவின் அகாடமியில் மாணவராகச் சேர்ந்தார் அரிஸ்ரோட்டில். அங்கு தத்துவம் படித்து சிறந்த மாணவர் பட்டத்தைப் பெற்று அங்கேயே ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தார்.

மொத்தம் இருபது வருடங்கள் அரிஸ்ரோட்டில் என்கிற வைரம் பிளேட்டோவினால் பட்டை தீட்டப்பட்டு ஜொலித்துக் கொண்டிருந்தது. பிளேட்டோவின் மாணவர்களில் அவருக்கு மிகவும் பிடித்தவர் அரிஸ்ரோட்டில் மட்டுமே.

தான் சொல்கிற அத்தனை விடயங்களையும் உன்னிப்பாகக் கவனித்து உள்வாங்கிக் கொள்வது அரிஸ்ரோட்டில் மட்டும்தான் என்று பிளேட்டோவால் உச்சி முகரப்பட்டார்.

இலக்கணங்கள், இலக்கியங்கள், அற்புதமான தேகப் பயிற்சிகள் உலகை உணர்த்தக்கூடிய தத்துவங்கள், கொள்கைகள் உலகை வழிநடத்தக் கூடிய சாத்திரங்கள் எல்லாவற்றையும் அரிஸ்ரோட்டில் பிளேட்டோவின் அகாடமியில் இருந்துதான் அறிந்து கொண்டார்.

குரு- சிஷ்யர் உறவு சிறப்பான நிலையை எட்டிக் கொண்டிருந்தது. திடீரென பிளேட்டோவுக்கு உடல்நிலை மோசமடையத் தொடங்கியது.

அப்படி அவருக்கு உடல்நலம் குன்றிய போது அவருடைய பேச்சுத்துணை அரிஸ்ரோட்டில் மட்டுமே.

சொல்ல மறந்த விடயங்களை எல்லாம் நினைவுபடுத்திச் சொல்லிக் கொண்டே இருப்பார். பேசும்போது மூச்சுத்திணறும். அவ்வப்போது தண்ணீர் குடித்துக் கொள்வார். குடித்து முடித்ததும் போதனைகள் தொடங்கி விடும்.

(தொடரும்)

எண்ணங்கள் எப்போதும் தூய்மையானதாகவும் பிறருக்கு நன்மை தருவதாகவும் எளிமையானதாகவும் இருக்க வேண்டும். – சின்மயானந்தர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அபிவிருத்தி சார்ந்த கூட்டங்களை பாதுகாப்புடன் நடத்துங்கள்

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துகின்ற நடவடிக்கையில் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்க முடியாது.

அதேநேரம் வட மாகாணத்தின் அபிவிருத்தி சார்ந்த வேலைத்திட்டங்கள் மற்றும் உட்கட்டுமானப் பணிகள், வேலைவாய்ப்புகள் என்பன தொடர்ந்து முன்னெடுக்கப்படுவது அவசியமாகும்.

எனவே இது தொடர்பில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், உயர் அதிகாரிகள், சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் கூடி ஆராய வேண்டுமாயின் கொரோனாத் தொற்றை தடுப்பதற்கான பாதுகாப்பு நடைமுறைகளை நூறு வீதம் பின்பற்றியவாறு கூட்டங்களை நடத்துவதும் அவசியமானது.

மேல் மாகாணத்தில் கொரோனாத் தொற்றுப் பரவுகை அதிகமாக இருப்பதன் காரணமாக மேல் மாகாணத் தொடர்புடைய அமைச்சர்கள், திணைக்களத் தலைவர்கள் வட மாகாணத்துக்கு வருகை தந்து கூட்டங்களை நடத்து வது தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவலாம்.

அவ்வாறு மாறுபட்ட கருத்துக்கள் நிலவுவதற்குள் இருக்கக்கூடிய நியாயமான விடயங்கள் கவனிக்கப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு கூட்டங்களை, ஆய்வுகளை நடத்தும்போது அது சாதகமான விளைவுகளையே தந்தாகும்.

உண்மையில் கொரோனாத் தொற்று என்ற விடயத்தை முன்வைத்து தமிழர் தாயகத்துக்கு கிடைத்த – கிடைக்க வேண்டிய அபிவிருத்திப் பணிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் தடைப்பட்டு போவதற்கு எந்தவகையிலும் நாம் இடம்கொடுத்துவிடக் கூடாது.

எனவே இதுவிடயத்தில் நாம் அனைவரும் தெளிவாக இருக்க வேண்டும்.

குறிப்பாக இப்போது வட மாகாணத்தில் வீதி நிர்மாணம் என்பது முதன்மைப்படுத்தப்பட வேண்டிய இடத்தில் உள்ளது.

உதாரணத்துக்கு மானிப்பாய் வீதி, குறிகாட்டுவான் வீதி, கல்லுண்டாய் – காரைநகர் வீதி போன்ற பல வீதிகள் திருத்தியமைக்கப்பட வேண்டியுள்ளன.

இவை திருத்தியமைக்கப்படாத நிலையில் வாகன நெருக்கடிகள் ஏற்பட்டு விபத்துக்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் உண்டு.

தவிர, சில பெருந்தெருக்களின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், அவை தொடர்ந்து முன்னெடுக்கப்படுவது, வீதி வேலைகளை நிறைவு செய்வதற்கும் அதில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்குத் தொடர் வேலைவாய்ப்பு கிடைப்பதற்கும் அவசியமானது.

எனவே கொரோனா தொற்றின் கட்டுப்பாட்டுக்குரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை கடைப்பிடித்துக் கொண்டு, எங்களின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டியது அவசியமானதாகும்.

### சகல ஆலயங்களிலும் இன்று முதல்

# 10 நாட்களுக்கு 10 நிமிடங்கள் மணி ஒலிக்கச் செய்து வழிபடுங்கள்

### நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

சகல ஆலயங்களிலும் இன்று நவம்பர் 7 ஆம் திகதி சனிக்கிழமை தொடக்கம் 10 நாட்களுக்கு நண்பகல் 12 மணி தொடக்கம் 10 நிமிடங்கள் மணி ஒலிக்கச் செய்து அனைத்து மக்களும் பிரார்த்தனை செய்வதற்கு ஆலய நிர்வாகிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் வலியுறுத்தியுள்ளது.

அனைத்து மதத் தலைவர்களும் இந்தப் பணியை முன்னெடுக்க வேண்டும் என்று நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கலாநிதி ஆறு திருமுருகன், ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் இணைந்து நடத்திய ஊடக சந்திப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதுதொடர்பில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் சார்பில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

கொரோனா எனும் ஆபத்தான நோயின் அவலம் 3ஆவது அலையாக அதிகரிக்கும் வேளையில் பொதுமக்கள் மிகக் கவனமாக உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

அனைத்து மக்களையும் காத்தருள சிவப்பரம்பொருளை முதற்கண் மன்றாடி, வேண்டுதல் செய்வோம். அனைவரும் பிரார்த்தனைக்கு முக்கியத்துவம் கொடுங்கள்.

01. ஆலயங்களில் பக்தர்கள் கூடுவதைத் தவிர்த்து வீட்டில் அமைதியாகப் பிரார்த்தியுங்கள்.

02. ஆலயங்களில் நித்திய நைமித்திய பூஜை வழிபாடுகள் நடைபெறவேண்டும். அதற்கு இடையூறின்றி ஒத்துழையுங்கள்.

03. சிறுவர்கள், முதியோர், நோயாளர்கள் வீட்டைவிட்டு வெளியில் வருவதை இயன்றவரை தவிருங்கள். வீட்டில் பாதுகாப்பாக இருங்கள்.

04. சுகாதாரப் பகுதியினரின் அறிவுறுத்தல்களுக்கு அனைவரும் மதிப்புக் கொடுங்கள்.

05. நோயாளர்களுக்கு உதவும் மருத்துவத்துறையினரின் பாதுகாப்புக்கு அனைவரும் உதவுங்கள். அவர்களுக்காக வும் கடவுளை வேண்டுங்கள் என்றுள்ளது. (ம–3,18,33)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று 7 ஆம் திகதி சனிக்கிழமை 8 மணியிலிருந்து 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** சுன்னாகத்திலிருந்து மாவிட்டபுரம் வரை, சுன்னாகம் சந்தியிலிருந்து கந்தரோடை பாடசாலை வரை, மல்லாகம் சந்தியிலிருந்து அளவெட்டிவரை, சுன்னாகம் இலங்கை வங்கி, சுன்னாகம் சந்தை, மக்கள் வங்கி சுன்னாகம், மல்லாகம் நீதிமன்றம், **Elephant Metal & Aluminium works (Pvt) Ltd,** சாரையடி, வி.எம் வீதி, தம்பசிட்டி, கொழும்புத்துறை, **A.V.Road,** துண்டி, நெடுங்குளம், மணியந்தோட்டம், கெலன்தோட்டம், உதயபுரம், பாசையூர், புங்கன் குளம் சந்தி, உதயபுரம், மணியந்தோட்டம் **Infentas Ice Solutions Pvt Ltd,** பெரியவிளான், இளவாலை, மாரீசன்கூடல், சேந்தாங்குளம், மணற்காடு, அம்பன், குடத்தனை, பொற்பதி, அம்பன் வைத்தியசாலை ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** அவுசதப்பிட்டிய, பகல அளுத்வத்த, புபுதுகம ஆகிய இடங்களிலும்,

**மன்னார் பிரதேசத்தில்** எழுத்தூரிலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், **Youth Training Centre,** தலைமன்னார் **Palmyarah House,** கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, கரைசல் **Palmyrah House Timex** ஆடைத் தொழிற்சாலை, தலைமன்னார் வைத்தியசாலை, **New Silk Road Aquatic Company** ஆகிய பிரதேசங்களிலும்,

நாளை 8 ஆம் திகதி ஞாயிறு காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** ஊரெழு மேற்கு, பொக்கணை, கரந்தன், நீர்வேலி ஒரு பகுதி, போயிட்டி, **Omini Aluminium Factory, VM Road,** கல்லூரி வீதி, சாளம்பை, தம்பசிட்டி, கொக்குவில் கே.கே.எஸ்.வீதி சந்தியிலிருந்து தின்னவேலிச் சந்தி வரை, தின்னவேலி, மாவடி, பொற்பதி, மருத்துவபீடம், மருத்துவபீட அரங்கம் ஆகிய இடங்களிலும்,

**கிளிநொச்சி பிரதேசத்தில்** தொட்டியடி, புத்தடி, விசுவமடு மேற்கு, தேராவில், உடையார்கட்டு, மூங்கிலாறு, இருட்டுமடு, குரவில், வள்ளிபுனம், தேவிபுரம், கைவேலி, 18 **VIR** இராணுவமுகாம் **68th Brigade** இராணுவ முகாம் 683 இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2020

**"ஒருமரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நாட்டுங்கள்."**

**-கரோலஸ் இலினேயஸ் (தாவர வகைப் பாகுபாட்டியலாளர்)**

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## இறைவனை மட்டுமே சார்ந்திரு

❖ மனிதத் துணை அனைத்தையும் விட இறைவன் எல்லையற்ற பெருமையை உடையவனாகிறான். இறைவனிடம் நம்பிக்கை கொள். அவரையே எப்போதும் சார்ந்திரு அப்போது நன்னெறியில் செல்வாய். எதனாலும் உன்னை வெல்ல முடியாது.

❖ இறைவனது தொண்டர்களுக்குத் தொண்டு செய்பவர்கள் அவரது உத்தமத் தொண்டர்கள் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

❖ பொருளாதார மதிப்பு இருக்கின்ற மதமே வெற்றி பெறும். ஆயிரக்கணக்கான ஒரே விதமதப் பிரிவுகள் ஆதிக்கத்திற்குப் பாடுபடலாம். ஆனால், பொருளாதாரப் பிரச்னையைத் தீர்ப்பவைகளே ஆதிக்கத்தைப் பெறுகின்றன.

❖ ஒரு லட்சிய மதத்தின் நோக்கம் இவ்வுலக வாழ்விற்கும் உதவ வேண்டும். மறு உலகிற்கும் வழிகாட்ட வேண்டும். அதே வேளையில், இறப்பையும் ஏற்க அது ஒருவனை ஆயத்தம் செய்யவும் வேண்டும்.

❖ மதத்தைப் பற்றிக் கொண்டு சண்டையில் இறங்காதே, மதச் சண்டைகளும் வாதங்களும் அறிவின்மையின் அறிகுறி. தூய்மையும், அறிவும் வெளியேறி இதயம் வறளும் போது தான் சண்டைகள் தொடங்கும் அதற்கு முன்னால் அல்ல.

# குருப்பெயர்ச்சிப் பலன்கள்

## 15.11.2020-13.11.2021

## ஒன்பதில் வந்தது குருபகவான், உன்னத வாழ்வு இனி அமையும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**ரிஷப இராசி வாசகர்களே!**

இதுவரை உங்கள் இராசிக்கு 8 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த குரு பகவான், 15.11.2020 அன்று 9 ஆம் இடத்தில் அடியெடுத்து வைக்கின்றார். அங்கு சுமார் ஓராண்டு காலம் வீற்றிருந்து, அதன் பார்வை பலனால் உங்கள் விருப்பங்கள் நிறைவேற உறுதுணையாக இருப்பார். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு பகைக் கிரகமான குரு, இப்பொழுது உங்கள் இராசியைப் பார்க்கப் போகின்றார். ஆனால் குரு பகவான் இருக்குமிடம் நீச்ச வீடாகும். இருப்பினும் வலிமை இழந்த குரு பார்ப்பதால், சுக்கிரன் ஆதிக்கம் பெற்ற உங்கள் இராசிக்கு நன்மைகளே கிடைக்கும்.

இடையில் சில மாதங்கள் 10 ஆம் இடமான தொழில் ஸ்தானத்திற்கு செல்கின்றார். குரு வக்கிர இயக்கத்திலும் இருக்கின்றார். 'ஐந்தும், ஒன்பதும் மிஞ்சும் பலன் தரும்' என்பது பழமொழி. சுய ஜாதகத்தில் திசாபுத்தி பலம் பெற்றவர்களுக்கு பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். மிஞ்சும் அளவிற்கு பலன் கிடைக்கும். இடையில் ஏதேனும் இடையூறுகள் வருமேயானால், வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குருவை வழிபடுவதன் மூலம் நன்மைகளை வரவழைத்துக் கொள்ளலாம்.

**குருவின் பார்வை பலன்**

இந்தக் குருப்பெயர்ச்சியின் விளைவாக, குரு பகவான் உங்கள் இராசியையும் 3, 5 ஆகிய இடங்களையும் பார்க்கப் போகின்றார். குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் உடல்நலம் சீராக இருக்கும். உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

குருவின் பார்வை 3 ஆம் இடத்தில் பதிவதால் வெற்றிகள் ஸ்தானம் புனிதமடைகின்றது. எனவே தொழில், உத்தியோகம், பொதுநலம், அரசியல் போன்றவற்றில் நீங்கள் நினைத்தவை நடைபெறும். பணியாளர்கள் பக்கபலமாக இருப்பார்கள்.

குருவின் பார்வை 5 ஆம் இடத்தில் பதிவதால் பூர்வ புண்ணிய ஸ்தானம் புனிதமடைகின்றது. இதன் பலனாக உங்களுக்கு கிடைக்கும் யோகங்கள் அனைத்தும் படிப்படியாக வந்து சேரும்.

**நட்சத்திரப் பாதசாரப்படி பலன்கள்**

**உத்தராடம் நட்சத்திரக்காலில் சூரியன் சாரத்தில் குரு சஞ்சாரம் (15.11.2020 முதல் 4.1.2021 வரை)**

உங்கள் இராசிக்கு 4 ஈம் இடமான சுக ஸ்தானத்திற்கு அதிபதியானவர் சூரியன். அவரது சாரத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது, சுகங்களும் சந்தோசங்களும் வந்து சேரும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். தாய்வழி ஆதரவு கிடைக்கும். 'வீடு கட்ட வேண்டும், இடம் வாங்க வேண்டும், கட்டிய வீட்டைப் பழுது பார்க்க வேண்டும்' என்றெல்லாம் கனவு கண்டவர்களுக்கு அவை கைகூடும் நேரமிது. அதற்காக கடன் கேட்டு அலுவலகத்தில் விண்ணப்பித்திருந்தாலும் சரி, வங்கிகளின் ஒத்துழைப்பை நாடினாலும் சரி உடனடியாக பலன் கிடைக்கும். உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருப்பர். பயணங்கள் பலன் தருவதாக அமையும். நீண்ட நாட்களாக புதிய வாகனங்கள் வாங்க வேண்டுமென்று நினைத்தவர்கள் இப்பொழுது அதைச் செயற்படுத்த எடுத்த முயற்சி வெற்றி பெறும். உத்தியோகத்தில் இதுவரை மறுக்கப்பட்ட சலுகைகள் இப்போது கிடைக்கும். உழைப்புக்கு ஏற்ப பலன் கிடைப்பதோடு, உடன் பணிபுரிபவரால் ஏற்பட்ட உபத்திரவங்களும் குறையும்.

**திருவோணம் நட்சத்திரக்காலில் சந்திரன் சாரத்தில் குரு சஞ்சாரம் (5.1.2021 முதல் 1.3.2021 வரை)**

சந்திரன், உங்கள் இராசிக்கு சகாய ஸ்தானாதிபதி ஆவார். எனவே எதிர்பார்த்த நன்மைகள் எளிதில் கிடைக்கும். உடன்பிறப்புகள் பகை மறந்து செயற்படுவர். தொழில் புரிவோர், வளர்ச்சியை முன்னிட்டுப் புதிய பணியாளர்களை சேர்த்துக்கொள்வர். திறமை பளிச்சிடும். தீட்டிய திட்டங்கள் வெற்றிபெறும்.

**அவிட்டம் நட்சத்திரக்காலில் செவ்வாய் சாரத்தில் குரு சஞ்சாரம் (2.3.2021 முதல் 4.4.2021 வரை, மீண்டும் 14.9.2021 முதல் 13.11.2021 வரை)**




இக்காலத்தில் குரு பகவான் உங்கள் இராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாயின் சாரத்தில் சஞ்சரிப்பதால் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். விலகிச்சென்ற வரன்கள் கூட விரும்பி வரலாம். மனமுறிவு ஏற்படும் அளவிற்கு கருத்து வேறுபாடு ஏற்பட்ட தம்பதியர் கூட மனம் மாறி ஒற்றுமையாக வாழ வழிபிறக்கும்.

**அவிட்டம் மற்றும் சதயம் நட்சத்திரக்காலில் செவ்வாய் மற்றும் ராகு சாரத்தில் குரு சஞ்சாரம் (5.4.2021 முதல் 13.9.2021 வரை)**

இக்காலத்தில் கும்ப இராசியில் குரு சஞ்சரிக்கின்றார். அப்பொழுது அதன் பார்வை 2, 4, 6 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். இல்லத்தில் மங்கல ஓசையும், மழலையின் ஓசையும். கேட்கும் வாய்ப்பு உண்டு. 'நடக்குமோ, நடக்காதோ' என்று நினைத்த சில காரியங்கள் துரிதமாக நடைபெறும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். தனவரவு தாராளமாக வந்து சேரும். வேலைவாய்ப்புக்காக புதிய இடத்தில் முயற்சி செய்தால் அதில் வெற்றி கிடைக்கும். மேலதிகாரிகள் உங்கள் குரலுக்கு செவி சாய்ப்பர். கேட்ட சலுகைகள் உங்களுக்கு கிடைக்கும்.

**குருவின் வக்கிர இயக்கம்**

16.6.2021 முதல் 13.10.2021 வரை குரு வக்கிர இயக்கத்தில் இருக்கின்றார். கும்பம், மகரம் இரண்டு இராசிகளிலும் வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு அஷ்டமலாபாதிபதியானவர் குரு. அவர் வக்கிரம் பெறும் இக்காலம், ஒரு பொற்காலமாகும். உங்கள் இராசிநாதன் சுக்கிரனுக்கு, குரு பகை கிரகம் என்பதால் பகைவன் வலிமை இழக்கும் போது நன்மைகள் அதிகம் நடைபெற வேண்டுமல்லவா? எனவே பொருளாதார நிலை உயரும்.

புதியவர்களின் சந்திப்பால் புதிய திருப்பங்கள் ஏற்படும். பிறருக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த தொகை கிடைக்கும். மாற்று மருத்துவத்தால் உடல் நலத்தை சீராக்கிக்கொள்ளலாம். தொழில் வளம் பெருகும். உத்தியோக முன்னேற்றம் எதிர்பார்த்தபடி நடைபெறும். பிரதோஷ வழிபாட்டின் மூலம் பெருமைகள் சேரும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு**

இல்லத்து பூஜை அறையில் சிவ குடும்பப்படம் வைத்து, தினமும் திருவாசகம் பாடி வழிபடுவது நல்லது. வியாழக்கிழமை அன்று குரு கவசம் பாடி குருபகவானையும் வழிபட்டால் எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

ரிஷப இராசியில் பிறந்த பெண்களுக்கு, இந்தக் குருப்பெயர்ச்சி இனிய பெயர்ச்சியாக அமையப் போகின்றது. மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும். உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள். கணவன்-மனைவிக்குள் அன்பும், ஆதரவும் கூடும். குடும்ப முன்னேற்றத்திற்கு இடையூறாக இருந்தவர்கள் விலகிச் செல்வர்.

வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்கள் வந்து சேரும். தாய்- தந்தையர்களின் ஆதரவு திருப்தி தரும். பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். பணிபுரியும் பெண்களுக்கு முன்னேற்றத்துடன் கூடிய இடமாற்றம் கிட்டும். குரு வழிபாடு குதூகலம் வழங்கும்.

(தொடரும்)

## வர்த்தக நிலைய...

பொருட்களையும் அடித்துச் சேதப்படுத்தி விட்டுத் தப்பித்துள்ளது. அந்த வழியால் சென்ற இராணுவத்தினர் கும்பலைச் சேர்ந்த ஒருவரை மடக்கிப் பிடித்துள்ளனர்.

அத்துடன், கும்பல் பயணித்த மோட்டார் சைக்கிள்களில் ஒன்றும் அவ்விடத்தில் கைவிடப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

நேற்று மாலை 6.30 மணியளவில் மானிப்பாய் சந்திக்கு அண்மையாக பொன்னாலை வீதியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

மோட்டார் சைக்கிள்களில் வந்த வன்முறைக் கும்பல் கடைக்குள் புகுந்து உரிமையாளரின் கழுத்தில் தாக்கியுள்ளது. அத்தோடு கடையிலிருந்த பொருட்களை சேதப்படுத்தி விட்டு தப்பிக்க முற்பட்ட வேளை அவ்வழியால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இராணுவத்தினர் கும்பலைப் பிடிக்க நடவடிக்கை எடுத்தனர்.

எனினும் ஒருவரை மட்டும் இராணுவத்தினரால் பிடிக்க முடிந்தது. ஏனையோர் தப்பித்துள்ளனர். அத்துடன் கும்பல் பயணித்த ஸ்கூட்டிப் பெப் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டது. (ம-3)

## வவுனியாவில்...

மாக மீட்கப்பட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளதாக கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் வாகனத்தில் சோளன் விற்பனைக்காக வந்த நிலையிலேயே நேற்று சடலமாக மீட்கப்பட்டதாக குறிப்பிடப் பட்டுள்ளது. (ம-3,250,299)

## யாழ்.நகரில்...

பெறுமதியான பொருட்கள் கொள்ளையிடப் பட்டுள்ளது.

கஸ்தூரியார் வீதியில் உள்ள ஒரு நகைக் கடை, துவிச்சக்கரவண்டி விற்பனை நிலையம் என்பவற்றுடன் ஓர் களஞ்சியமும் இவ்வாறு உடைக்கப்பட்டுள்ளன.

இரு கடைகளின் மேற்பகுதியை பிரித்து உள் இறங்கிய திருடர் கூட்டம் துவிச்சக்கரவண்டி விற்பனை நிலையத்தில் நேற்று முன்தினம் வியாபார பணம் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் திருடப்பட்டதுடன், நகை கடையின் கூரையை பிரித்து உள் இறங்கிய திருடர்கள் அங்கிருந்த நகைகள் அயன்சேவ்வில் இருந்தமையினால் தப்பியபோதும் வெளியில் இருந்த கால் பவுண் நகையும் குபேரன் சிலையின் முன்பாக இருந்த ஒரு தொகை பணமும் கொள்ளையிடப்பட்டுள்ளது.

மூன்றாவது களஞ்சியத்தின் பின் கதவு உடைக்க முற்பட்டபோதும் எவையும் களவாடப்படவில்லை எனத் தெரிவிக்கப் படுகின்றது. (ம-3)

## தமிழ் அரசியல்...

காரத்தில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்று வடக்கின் முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன் நீதியமைச்சரிடம் கேள்வி எழுப்பி இருந்தார். இதுதொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே சி.வி.விக்னேஸ்வரன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"வடக்கின் முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவனின் கோரிக்கையை வரவேற்கின்றேன். ராஜபக்ஷ குடும்பத்தினருடன் நெருங்கிய தொடர்பினை பேணுகின்ற ஒருவரே முன்னாள் ஆளுநர் சுரேன் ராகவன். அவர் மக்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர் அல்ல. ஆனால் அவரை பாராளுமன்றத்தில் அமர்த்தியுள்ளனர்.

அவர் கூறுவது அரசாங்கத்தின் கோரிக்கையாகவும் இருக்கக் கூடும். பல வருடங்களாக சிறையில் வாழுகின்றவர்களை விடுதலை செய்து தமிழர்களின் மனங்களை தங்களது பக்கம் திருப்ப வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் செயற்படுவதற்கு வாய்ப்புள்ளது என்றார். (ம-3)

## பரீட்சைக்கான...

யில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சாதாரண தரப் பரீட்சை 2021ஆம் ஆண்டு ஜனவரி 18 முதல் 28 ஆம் திகதி வரை நடைபெறும் என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். (ம-3)

## கூட்டம் நடத்த...

மீறியே மாவட்ட செயலகத்தில் கூட்டம் நடைபெற்றிருப்பதாக பொது சுகாதார வைத்திய அதிகாரி கூறியுள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர எல்லைப் பகுதிக்குள் கல்யாண மண்டபங்கள், உணவகங்கள், பேருந்துகளிற்கு மட்டும் கட்டுப்பாடு விதித்துவிட்டு அதனை நடைமுறைப் படுத்த வேண்டிய அதிகாரிகள், அரசியல்வாதிகள் 200க்கும் மேற்பட்டோர் மாவட்டச் செயலகத்தில் ஒன்றுகூடும்போது சுகாதார வைத்திய அதிகாரி உறக்கத்தில் இருப்பதாக குற்றம் சாட்டப்படுவது தொடர்பில் தொடர்பு கொண்டு கேட்டபோதே மேற்கண்டவாறு பதிலளித்தார்.

இது தொடர்பில் வைத்திய அதிகாரி மேலும் விபரம் தெரிவிக்கையில்,

வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் இதனை நடத்த முடியாது என்பது உண்மை. அதற்கான வழிகாட்டலை சுகாதாரத் திணைக்களத்திற்கும் தெரிவித்து மாவட்டச் செயலாளருக்கும் எழுத்தில் அறிவித்தேன்.

இத்தனை பணிகளையும் மீறி கூட்டம் இடம்பெற்றது மட்டுமன்றி எமக்கு ஆலோசனை வழங்கும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இவற்றின் அடிப்படையில் எனது அதிகார எல்லைக்குள் நான் ஆற்றவேண்டிய பணியை ஆற்றினேன் எனப் பதிலளித்தார். (ம-3)

## + 400...

கண்டறியப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதன்படி, மினுவாங்கொட மற்றும் பேலியகொட மீன் சந்தை கொரோனா கொத்தணியில் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை ஒன்பதாயிரத்தைக் கடந்து ஒன்பதாயிரத்து 492ஆக அதிகரித்துள்ளது.

இந்நிலையில் நாட்டில் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 970ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## மாவட்டச் செய...

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் பொருட்டு ஸ்தாபிக்கப்பட்ட கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் குழுவின் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிற்கான முதலாவது கூட்டம் இடம்பெற்றது.

இதன்போது, நெடுந்தீவின் பிரதான வீதியை புனரமைக்க வேண்டுமென பிரதேச செயலாளர் கோரிக்கை விடுத்தார். அது குறித்து தான் பேசியுள்ளதாகவும், வீதி புனரமைக்கப்படும் என்றும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

அந்த பாதையும் நெடுந்தீவிற்கான கடல்வழி பயண ஏற்பாடும் முன்னுரிமை திட்டத்தில் உள்ளதாக அரச அதிபர் குறிப்பிட்டார்.

அத்துடன் மானிப்பாய்- காரைநகர் மற்றும் புத்தூர்- கந்தரோடை வீதிகளும் முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வீட்டுத் திட்ட பயனாளிகளிற்கு எஞ்சிய பணம் கையளிக்கப்படாமல் உள்ளது பற்றி சுட்டிக் காட்டப்பட்டது. அதனை செய்யலாமென அமைச்சர்கள் தெரிவித்தனர்.

கிராமங்களில் உள்ளூராட்சி மன்றங்கள் மின் விளக்குகளை பொருத்தினாலும், அதை திருத்தம் செய்ய மின்சார சபையை நாட வேண்டியுள்ளதையும், அதற்கு கட்டணம் அறவிடப்படுவதையும் சுட்டிக் காட்டினர்.

தெற்கில் அந்த நடைமுறையில்லையென அமைச்சர்கள் தெரிவித்தனர். இதை எப்படி கையாள்வதென விவாதிக்கப் பட்டது.

அத்துடன், யாழ்ப்பாண குடாநாட்டின் குடிநீர் விவகாரம் ஆராயப்பட்டது. இரணைமடுவில் இருந்து கொண்டு வரப்படும் தண்ணீர் போதாது என்பதால் வேறு திட்டங்களையும் ஆராய வேண்டுமென அமைச்சர்கள்சுட்டிக்காட்டினர்.(ம-3,33)

## கொரோனா...

கொரோனா வைரஸுக்கு தீர்வை காண விட்டால் மூன்றாவது அலை உருவாகலாம் என விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

மூன்றாவது அலை ஜனவரியில் உருவாகலாம். அது இன்னமும் ஆபத்தானதாக காணப்படலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## தென்மராட்சி...

வாள்வெட்டு தாக்குதல் நடத்தியதில் இளைஞன்ஒருவர்படுகாயமடைந்துள்ளார்.

எழுதுமட்டுவாள், கிளாலி பகுதியை சேர்ந்த கனகசபை ஜெயக்குமார் (வயது-22) என்ற இளைஞனே வாள்வெட்டுத் தாக்குதலிற்கு இலக்கானார்.

வாள்களுடன் வந்த 4 ரௌடிகள் இந்த தாக்குதலை நடத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் கிளிநொச்சி மாவட்டம் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிளாலிப் பகுதியில் நேற்று இரவு வீடு ஒன்றுக்குள் புகுந்த வன்முறைக்குழு நடத்திய வாள் வெட்டு வன்முறைத் தாக்குதலில் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர். (ம-3)

## 23 வயது...

இதன்மூலம் நாட்டில் கோவிட் -19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 30ஆக அதிகரித்துள்ளது. (ம-3)


தன நிதானய
திகதி - 2020.11.06
சீட்டிழுப்பு இலக்கம் - 338
W 17 47 50 66

மெகா பவர்
திகதி 06/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0665
A 20 12 18 62 80

நீரோகா
திகதி 06/11/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0718
மிதுனம் 17 29 31 36

கொவிசெத
சீட்டிழுப்பு திகதி 06-11-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2593
V 43 44 50 73

மஹஜன சம்பத
திகதி 2020/11/06
சீட்டிழுப்பு இலக்கம் 4298
Q 6 9 0 5 7 9

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 45,44,732/=
திகதி : 06.11.2020
வெற்றி வாரம் : 2975
வர்ணம் : கரு நீலம்
வெற்றி இலக்கங்கள் 01 04 34 35
கன்னி
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,479,460

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1094
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 82,535,225/-
வெற்றி இலக்கங்கள் 02 34 44 74 S

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.11.06
சீட்டிழுப்பு இல.: 3424
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 31,344,825.30
வெற்றி இலக்கங்கள் 01 49 59 62 O
5483

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1268
சீட்டிழுப்பு திகதி 06.11.2020
நிறம் இளஞ்சிவப்பு
தினம் வெள்ளி
I 19 42 70 71
SUPER 500 8 7 1 4
5,25,28,892.80/=

A 15 31 66 71
647
பச்சை
06.11 2020
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 87,485,045
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

# மாமனாரை கொலை செய்த மருமகனுக்கு மரணதண்டனை

## வவுனியா மேல்நீதிமன்றம் தீர்ப்பு

(வவுனியா)

வவுனியா செட்டிகுளம்மெனிக்பாம் பகுதியில் கடந்த 2005 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாமனாருக்கும் மருமகனுக்கும் இடையேயான பணக்கொடுக்கல் வாங்கல் தகராறுடன் கூடிய முறுகல் நிலையைத் தொடர்ந்து மெனிக்பாம் கிராமத்தில் தனது வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த மாமனாரை நள்ளிரவு வேளையில் கோடரியால் தாக்கி கொலைசெய்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட மருமகனுக்கே வவுனியா மேல் நீதிமன்றினால் மரண தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது.

கடந்த 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20 ஆம் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தினால் குற்றப் பகிர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட வழக்கு விசாரணைகளின் பின்னரே குறித்த தீர்ப்பு கடந்த புதன் கிழமை வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.(ம-03.299)

# வெலிக்கடை சிறைச்சாலையில் நேற்றும் 23 கைதிகளுக்கு கொரோனாத் தொற்று

(கொழும்பு)

வெலிக்கடை சிறைச்சாலையில் நேற்றும் 23 கைதிகளுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள 22 பெண் கைதிகளுக்கும், ஆண் கைதி ஒருவருக்கும் இவ்வாறு கொரோனா தொற்றுக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளானவர்கள் அனைவரும் கொரோனா தொற்றுக்கு சிகிச்சை அளிக்கும் வெலிகந்த வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, வெலிக்கடை சிறைச்சாலையில் ஏற்கனவே ஏழு பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருந்த நிலையில் இவ்வாறு மேலும் 23 கைதிகளுக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-03)

# கரவெட்டி தொற்றாளர்களுடன் பழகியவர்களை அறியத் தருக

## சுகாதார பகுதியினர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கரவெட்டிப் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவர்கள் நடமாடிய பகுதிகள் குறித்த தகவல்களை அறியத் தருமாறு சுகாதாரப் பகுதியினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

அல்வாய் மனோகரா பகுதியில் கடந்த 10 நாட்களாக தனிமைப்படுத்தப்பட்டிருந்த இரண்டு பெண்கள் மற்றும் சிறுவனுக்கு தொற்று இருப்பது நேற்று கண்டறியப்பட்டது.

இவர்கள், வடமராட்சியின் பல்வேறு பகுதிகளுக்கு சென்றிருக்கலாம் என்று நம்பப்படுவதாகவும், எனவே இவர்களுடன் தொடர்புபட்டிருந்தவர்கள் அல்லது, இவர்கள் சென்ற இடங்கள் பற்றிய தகவல்கள் அறிந்தவர்களை உடனடியாக, சுகாதார திணைக்களத்துக்கு வழங்குமாறு வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-03)


காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், பலாலி றோட், கோண்டாவிலில் 5 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
1 1/2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை.
( கோண்டாவில் சந்திக்கு அருகாமை )
(4563)
077 623 4204, 077 505 8561

பகிரங்க ஏல விற்பனை

எதிர்வரும் 09.11.2020 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 11.30 மணிக்கு M.K குறியுடைய சிவப்புநிற கட்டாக்காலிப் பசுமாடு ஒன்று பகிரங்க ஏலத்தில் கைதடி நாவற்குழி கிராம அலுவலர் அலுவலகத்தில் ( ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய மண்டபம் ) விற்கப்பட உள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.
கைதடி, நாவற்குழி
கமக்கார அமைப்பு
(C-645)

காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், ராச வீதியில் 1 3/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
( ராச வீதி சந்திக்கு அருகாமையில் )
தரகர் தேவையில்லை.
(4563)
077 805 1655

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.
தொடர்பு
(4506)
077 340 5951
e-mail : engchelvam@gmail.com

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் 1150/=
லண்டன் 1050/= இத்தாலி 1250/=
5kgக்கு மேல் 11kgக்கு மேல் 21kgக்கு மேல் கட்டணம் குறைவு (C-613)
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1350/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
உங்கள் இடங்களுக்கு வந்து பொதிகள் பெற்றுக் கொள்ளப்படும். (கட்டணம் வேறுபடும்)
பொதிகளுக்கு 20,000ரூபா பெறுமதி வரையான காப்புறுதிக் கட்டணம் இலவசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது
எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்பு கொள்ளவும்
070 330 5500 077 888 9388 075 330 5500
976,கேகேஎஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை சண்டிலிப்பாய் சுன்னாகம் | நெல்லியடி ஆவரங்கால் சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கிளிநொச்சி வவுனியா மன்னார் | மல்லாவி துணுக்காய்

காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம், ஊரெழு, ஆனந்தகானம் பகுதியில் 44 பரப்புக் காணி. கரந்தன் குறுக்கு றோட் நீர்வேலி 2 3/4 பரப்புக் காணி (ராசா கடை அருகாமை) விற்பனைக்கு உண்டு.
பிரித்துக் கொடுக்கப்படும்.
தரகர் தேவையில்லை.
(4563)
076 640 0974, 077 894 9549

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK- 1025/=Kg
0768226240
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை
(C-505)



கண்ணீர் அஞ்சலி



ஊர்காவற்துறை பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும்
திரு. இ. தவக்குமார்
அவர்களின் அன்புத் தந்தை
அமரர்
கந்தையா இராசரத்தினம்
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
(4562)
யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம்



லொக்டவுன் வந்தால் என்ன செய்வீர்கள்? இன்னும் 02 நாட்களே
அமெரிக்க அதிஸ்ட விசா
2022ல் நீங்களும் அமெரிக்காவில்...
18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்
55000 இலவச விசாக்கள்
0768226244
கடந்த காலங்களில் எமக்கூடாக விண்ணப்பித்து அமெரிக்கா சென்ற வெற்றியாளர்களின் விபரங்களை ஆதாரத்துடன் எமது அலுவலகங்களில் பார்வையிடலாம்.
முதல் வருடம் பதிந்த போது எமக்கு கிடைக்கவில்லை, நான் மனம் தளரவில்லை இரண்டாவது வருடமும் V2 Travels ஊடாகவே விண்ணப்பித்தேன். அமெரிக்க விசா அதிஸ்ட சாலிகளுள் ஒருவராக எமது குடும்பமும் தெரிவுசெய்யப்பட்டது ஒருவேளை நாம் தெரிவுசெய்யப்படாமல் விட்டிருந்தால் கூட நான் மீண்டும் மீண்டும் அதிஸ்ட விசா கிடைக்கும் வரை முயற்சி செய்துகொண்டே இருப்பேன். ஏனென்றால் V2 Travels ஊடாக ஏற்கனவே எனக்கு தெரிந்த பலர் அமெரிக்க விசா வென்றுள்ளதால் எனது தெரிவு என்றுமே V2 Travels தான்.
(C-505)



பிரகாஷ் குடும்பம் அமெரிக்க விசா வெற்றியாளர்
V2 Travels
யாழ்ப்பாணம் 0768226243 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | சாவகச்சேரி 0768226242 | திருகோணமலை 0768226237
மானிப்பாய் 0768226238 | சுன்னாகம் 0764550670 | புதுக்குடியிருப்பு 0764550673 | பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.11.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.